# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஒக்ரோபர்.16 - ஒக்ரோபர்.22, 2013 பக்கம் - 24 30/-



## எல்லாளன்:

பகையின் குகையில் மூட்டிய பெருநெருப்பு

## ஆவி விரட்டும் மந்திரவாதி !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூழுகன்

# தமிழருக்கு இலுப்பம்பூ சர்க்கரையா?

தமிழ் போசும் மக்கள் செறிந்துவாழும் வடக்கில் முதல் முறையாக மாகாண சபைக்கு தேர்தல் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. இது உலகறிந்த உண்மை. ஆனால் தாம் வழங்கிய ஆணையை கூட்டமைப்பு சரியாகப் பயன் படுத்துகிறதா என்பதில் வாக்களித்த மக்களுக்கு சந்தேகம் எழுந்திருக்கிறது. இதற்கு முழுமுதற் காரணமும் கூட்டமைப்பு கட்சிகளே.

விடுதலைப்புலிகள் தமிழ்த்தேசியத்தை கட்டி யெழுப்பும் நோக்குடன் கூட்டமைப்பை உருவாக்கினர். அது தமிழ்மக்களது எதிர்கால அரசியலை கட்டியெழுப்பும் ஒரு முயற்சியாக அமைந்தது. கூட்டமைக்கப்பட்ட கட்சிகளை கண்காணித்து நெறிப்படுத்தும் நடவடிக்கை களை விடுதலைப்புலிகள் செய்ததால் முரண்பாடு கள் தவிர்க்கப்பட்டன. முரண்படுபவர்கள் எச் சரிக்கப்பட்டனர். கிட்டத்தட்ட அது பழக்கப் படாத குதிரைக்கான ஒரு கடிவாளமே. அப் போதும் வற்புறுத்தப்பட்ட ஒற்றுமைத் தன் மையே இவர்களுக்குள் இருந்திருக்கவேண்டும். அதாவது கடிவாள அசைவுகளுக்கு ஏற்ப இயங்குதல்.

2009 போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் கடிவாளம் அறுக்கப்பட்டுவிட்டது கூட்டுகுதிரைகளுக்கு. அன்றில் இருந்து இன்று வரை இவர்களுக்குள் போட்டியும் அதிகார வேற்றுமையும் படிப்படியாக உருவெடுக்கத் தொடங்கிவிட்டன. ஐந்து கட்சிக்கூட்டமைப்பு நான்காக மாறி மாகாண சபை நிர்வாகத்தோடு இல்லாமலே போய்விடுமோ என்ற சந்தேகம் மக்கள்மத்தியில் தோன்றியுள்ளது.

## மக்களின் வாக்களிப்பு

வடமாகாண சபைத் தேர்தலில் பெரும் பாண்மைத் தமிழ் மக்கள் வாக்களித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே. காரணம் ஒன்றல்ல.

சர்வதேசத்தின் பார்வையைத் தம்பக்கம் இழுக்கவும், தமிழ் மக்களுக்கு இலங்கையில் நெருக்கடி இருக்கிறது. அதை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடனும், வீடுதலைப் போராட் டத்தின் மௌனிப்பு -அந்த உணர்வின் வழியாக ஒரு சுதந்திர உரிமையை பெறும் நீண்டநாள் அபிலாசை, அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கான எதிர்கால அரசியல் புலம், தமிழ் தேசியக்கூட்டமைப்பே தமிழ்மக்களைப் பிரதி பலிக்கும் ஒரே ஒரு தமிழ் கட்சி. இவ்வாறான காரணங்களே தமிழ்மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதற்கான காரணங்களாக அமைந் தன. அதாவது மஹிந்த அரசின் மீதான ஒட்டு மொத்த எதிர்ப்பை மக்கள் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதற்காகக் களதாரிகளாகவே கூட்டமைப்பை மக்கள் பயன்படுத்துவதற்கு காரணமாகியது.

இப்போதுள்ள நிலைமைகளின்படி ஆலை இல்லாக்காட்டுக்கு இலுப்பம் பூ சக்கரை என் பது போலவே கூட்டமைப்பு காரரது நட வடிக்கைகள் இருப்பதாக வாக்களித்த மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

அதாவது மக்கள் வழங்கிய ஆணையை, விலை பேசவும், தமக்குள் பதவிகளுக்காக அடிபடவும் கூட்டுக்குள் பிழவை ஏற்படுத்தவும் பயன்படுத்துவதாகவே அதனைக் கருத வேண் டும்.

## நவிப்பிள்ளை வருகை

வடக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு வந்திருந்தார். அவர் போருக்குப்பின்னரான இலங்கையின் மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து தனது கள அவதானிப்புக்களைச் செய் யும் பொருட்டு இறுதிப்போர் இடம்பெற்ற இடங்களையும் பார்வையிட்டிருந்தார்.

இலங்கையில் தங்கியிருந்த வேளை நவிப் பிள்ளை, தமிழ்மக்களை சந்தித்து கலந்துரை யாடினார். அவரது கலந்துரையாடல், அல்லல் பட்ட தமது நீண்டபெரும் மனச் சுமையை கீழே இறக்கிவைத்த சுகத்தை அந்த மக்களுக்கு வழங் கியிருந்தது. அவர் மக்களுக்கு சில வாக்குறு திகளை வழங்கியிருந்தார். அதுமட்டுமல்லாது இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்தும் தனது அதிருப்தியை இலங்கையில் வைத்தே தெரிவித்தார். இதுவும் மக்களை ஒரு படி சிந்திப்புக்குத் தூண்டியது.

நவிப்பிள்ளை போன கையோடு வடக்கு தேர் தலுக்கான பரப்புரைப் பணிகளை போட்டி யிடும் கட்சிகள் ஆரம்பித்தன. இதில் அபி விருத்தி-சலுகை, உரிமை என்பன பேசுபொருள் களாகின.

இதன்போது உரிமை அரசியல் மக்கள் மத்தி யில் செல்லாக்கு செலுத்தியது. இதற்கான காரணத்தில் ஒன்று நவிப்பிள்ளையின் வருகை என்பது மறுக்கமுடியாதது.

## மக்களுக்கு அழுத்தம்

தமிழ்தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களித் தமை, ஆதரவாகச் செயற்பட்டமை போன்ற காரணங்களுக்காகத் தமிழ்மக்களைச் சிலர் இன்றும் தண்டிக்கின்றனர். தொழில் இடங் களில் பாரபாட்சம், தனிமையில் அச்சுறுத்தல், உதவிகளை இல்லாமற்செய்தல், பழிவாங்கல் என்று இந்த நிலைமை தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதை கூட்டமைப்பினர் கருத்தில் கொள்ளவில்லை என்றே கருதவேண்டும். காரணம் மக்கள் தமது உயிரை துச்சமாக வைத்தே வடக்கு தேர்தலில் வாக்களித்தனர். இதை வாக் களிப்பு வீதத்தில் வைத்து உணரலாம்.

வாக்களித்த, ஆதரவளித்த மக்கள் பலர் தாக்கப்பட்டுள்ளனர். 3க்கும் மேற்பட்ட வீடு கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இன்றும் புல னாய்வாளர்களால் பலர் அச்சுறுத்தலுக்கு ஆளா கின்றனர். இது ஒரு இனத்தின் உரிமையை அடக்கும் செயல். இலங்கையில் ஜனநாயகப் பண்புகள் இந்தளவுக்கு இருக்கையில்தான் மக் களின் எழுச்சியும் பேராதரவும் கூட்டமைப் புக்கு கிடைத்தது என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது,

## வெற்றி பெற்றவர்கள் பதவியேற்கவில்லை

வடமாகாண சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து உறுப்பினர்கள் சிலர் வடமாகாண அமைச்சு பதவியேற்பில் கலந்து கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து சர்வேஸ்வரன், சிவாஜிலிங்கம், மன்னாரில் இருந்து குணசீலன், முல்லைத்தீவிலிருந்து சிவ மோகன், வவுனியாவில் இருந்து மூவர் வைப வத்துக்கு வரவில்லை. கிட்டத்தட்ட பத்து உறுப்பினர்கள் நிகழ்வுக்கு வரவில்லை என்றால்???? இந்தப் புறக்கணிப்புக்கு கட்சிகளிடையே ஏற்பட்ட முரண்பாடுகளே காரணம் என்று கூறப்பட்டது.


ஆரம்ப நிகழ்வொன்றிலேயே உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமை கவலைக்குரியது. இவர் களது கோரிக்கை, நிலைப்பாட்டுக்கு அப்பால் மக்களின் உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் மதிப்பளிக்கச் சிலர் தவறியுள்ளனர் என்றே கருதவேண்டும்.

## மாற்று கட்சிகள் அறிவுரை

பெரும்பான்மை ஆதரவை வழங்கி வடக்கை ஆட்சி செய்து அபிவிருத்தி செய்யுங்கள் என்று மக்கள் வழங்கிய ஆதரவை கட்சி பேதங்களால் கூட்டமைப்பு மறந்துவிட்டது. தமக்குள் சண்டை யிட்டு பதவிகள் இழுபறியில் இருந்தபோது மக் களால் ஒதுக்கப்பட்ட கட்சிகள் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் செயற்படவேண்டும் என்று அறிவுரை கூறின. இதை தமக்குள் அடிபடுபவர் கள் சற்று சிந்தித்து பார்க்கவேண்டும். அல்லது வெட்கப்படவேண்டும்.

ஒரு கூட்டு குழு ஒருவரது தலைமையின் கீழ் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அதை விடுத்து மாற்றுத் தெரிவு இல்லை என்பதற்காக மக்களை ஏமாற்றும் அளவுக்கு மாறிவிடக் கூடாது. தமிழ்தேசியக்கூட்டமைப்பு இதை உணரவேண்டும்.

தமிழ் மக்களது உரிமையைக் கொண்டு கட்சி வினைகளை ஆற் றாது மக்கள் வினை போக்க முன்வர வேண்டும். இதுவே எதிர்கால அரசி யலுக்கு சாணக்கியமானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி புத்திரன்

# ஆவி விரட்டும் மந்திரவாதிகள்!



அண்மையில் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்ததாகக் கருதப்படும் புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் உள்ள பதுங்கு குழியுடன் கூடிய வீடு இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது

ஒருகாலத்தில் ஆவிகள் பற்றிய கதைகள் நிறையவே உலவுவதுண்டு. குறிப்பாகக் கெட்ட ஆவிகள் பற்றிய பயம் மக்கள் சிலரிடம் நிலவி வந்தது.

வீடுகளின் மேல் கல்லெறி விழுதல், திடீரென வீடு பற்றி எரிதல், சாப்பிடும்போது உணவில் மண், கழிவுப் பொருட்கள் என்பன காணப்படல் போன்ற சம்பவங்கள் ஏவி விடப்பட்ட கெட்ட ஆவிகளின் சேட்டைகள் என்றே கருதப்பட்டன.

இப்படியான சந்தர்ப்பங்களில் மட்டக்களப்பிலிருந்து மந்திரவாதிகளை அழைத்து வந்து தடைவெட்டி, கழிப்புக் கழித்து, சாந்திசெய்து ஆவிகளை விரட்டுவதுண்டு. இவற்றின் காரணமாக ஆவிகள் பற்றிய நம்பிக்கை பலமாகவே வேரூன்றியிருந்தது.

இப்படியான நிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராயிருந் தவரும் பின்பு பல்கலைக்கழக விரிவுரையாளராக விளங்கியவரும் தலைசிறந்த பகுத்தறிவு வாதிகளில் ஒருவரும் ஆபிரகாம் கோவூர் ஆவிகள் பற்றிய நீண்ட கடினமான ஆய்வுகளை மேற்கொண்டு ஊடகங்களில் பல கட்டுரைகளை வெளியிட்டார். அவற்றின் மூலம் அவர் ஆவிகள் என எதுவும் கிடையாது எனவும், மேற்படி சம்பவங்கள் மனோதத்துவ அடிப்படையிலான பாதிப்புக் களால் மனிதர்களாலேயே மேற்கொள்ளப் படுபவை என ஆதாரபூர்வமாக நிரூபித்தார்.

அத்துடன் எல்லா விதமான ஆவிகளும் வடக்கை விட்டு ஓடி விட்டன. ஆனால் தென்னிலங்கையில் புதையல்களைக் கண்டு பிடிக்கவும் புதையலைக் காவல் காக்கும் ஆவிகளை விரட்டவுமான மந்திர தந்திர வேலைகளைப் புத்த பிக்குகள் தொடர்ந்து வந்தனர். இந்து மதத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் போதனைசெய்த புத்தரின் சீடர்கள் வெற்றிலையில் மை வெளிச்சம் பார்த்து ஆவிகளுடன் உறவாடி வந்தனர். இப்போது ஆவிகள் பற்றிய கிலி இலங்கையின் அரச தரப்பினரைப்பிடித்து ஆட்ட ஆரம்பித்து விட்டது. முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளை அழித்து விட்டதாகத் தம்பட்டம் அடித்த அரசதரப்பினர் இப்போ பிரபாகரனின் ஆவி பற்றிப் பேச ஆரம்பித்துள் ளனர்.

அண்மையில் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்தாதகக் கருதப்படும் புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் உள்ள பதுங்கு குழியுடன் கூடிய வீடு இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அச் சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரபாகரனின் ஆவியை விரட்டவே அந்த வீட்டைத் தகர்த்து விட்டதாகத் தெரிவித்தார். கடந்த வருடம் பிரபாகரனின் பிறந்த வீடு படையினரால் தகர்க்கப்பட்டது. பிரபாகரனின் ஆவி தன் பிறந்த வீட்டைப் பார்க்க வரக் கூடும் என்ற பயத்தில் அந்த வீட்டை இடித்து விட்டார்கள் போல் தெரிகிறது.

இவ்வாறே வடக்கிலுள்ள மாவீரர்கள் துயிலுமில்லங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. ஒவ்வொரு கல்லறையும் இருந்த இடமே தெரியாமல் சிதைக்கப்பட்டன. பல ஆயிரக் கணக்கான மாவீரர்களின் ஆவிகள் பற்றிய பயமே இப்பெரும் அநாகரீகமான அழிப்பு நட வடிக்கைக்குக் காரணம் என நம்ப வேண்டியுள்ளது.

எவ்வளவு தான் விடுதலைப்புலிகளை அழித்துவிட்டதாக வீரம் பேசினாலும் இந்த ஆவிகள் பற்றிய பயம் அரச படைகள் உட்பட அரசபடைகள் உட்பட அரசதரப்பை அச்சுறுத்திக் கொண்டேயிருக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்சும் அவர்களும் அடிக்கடி விடுதலைப் புலிகளின் சர்வதேச வலைப்பின்னல் இன்னும் பலமாகவே இருப்பதாகவும் அவர்கள் சர்வதேச நாடுகளை இலங்கைக்கு எதிராகத் தூண்டி விடுகிறார்கள் எனவும் ஊடகங்களுக்குப் பேட்டி வழங்குவதுண்டு. மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், இன ஒடுக்குமுறை என்பன பற்றி எவராவது வாய் திறந்தால் அது இலங்கைக்கு எதிரான நடவடிக்கை என்பது அவர்களால் எழுதப்படும் அகராதியின் விளக்கம்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ "இலங்கையின் தமிழ் முஸ்லிம் அடிப்படைவாத ஆபத்து இருப்பதாகவும் அது தொடர்பாக உலக நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" எனவும் தெரிவித்திருந்தார்.

வடபகுதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க கூட இன்னும் சரணடையாத 400 புலிகள் வடக்கில் இருப்பதாகவும் எனவே மேலும் பல புது இராணுவ முகாம்கள் வடக்கில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்படிப் புலிகள் பற்றிய பயமும் ,புலிகளின் ஆவிகள் பற்றிய பயமும் இலங்கையின்அரச தரப்பின் நிம்மதியைக் தொடர்ந்து குலைத்துக் கொண்டிருக்கின்றன. அதனால் தான் விடுதலைப் புலிகளின் தடயங்களைத் தாங்கள் அழிப்பதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் தடயங்கள் இருக்கும் வரை விடுதலைப் புலிகளின் ஆவிகள் நடமாடிக் கொண்டேயி ருக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு. ஆனால் இவர்களால் அழிக்க முடிவதெல்லாம் வெறும் கல்லாலும், மண்ணாலும், சீமெந்தாலும் கட்டப்பட்ட கட்டடங்களையும் கல்லறைகளையும் மட்டும் தான்.

ஆனால் இவற்றின் அடியில் ஒரு மகத்தான வீர வரலாறு புதைந்திருக்கிறது. அது வீரமும், நியாயமும், சாதனைகளும் கொண்டு எழுப்பப்பட்ட அற்புதமான மண்டபம் அது. இது விடுதலை வேட்கை என்ற அசைக்க முடியாத அத்திவாரத்தின் மீது அமைக்கப்பட்டது.

அதை எந்தவொரு மந்திரவாதியாலும் அசைத்துப் பார்க்கக் கூட முடியாது. கட்டடங்களும் கல்லறைகளும் இடிக்கப்படும் போது அது பொங்கியெழும் கோபக் கனலாய் மீண்டும் மீண்டும் மெருகேற்றப்படும்.

அதில் பட்டு வரும் காற்றே தமிழரின் சுவாசத்திலும் இழையோடுகிறது. அதன் நிலைபேற்றின் நியாயங்கள் ஒவ்வொரு தமிழரின் குருதியிலும் கலந்துஓடுகிறது. நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பெற்ற மாபெரும் வெற்றி வெறும் புள்ளடிகளால் ஈட்டப்பட்ட பதவிகளுக்கும் பட்டங் களுக்கும் ஆட்களைத் தெரிவு செய்யும் தேர்தல் அல்ல.

இடிக்கப்பட்ட எமது தலைவனின் தங்குமிடங்களும் சிதைக்கப்பட்ட எமது மாவீரர் கல்லறைக்கும் கீழ் பரந்து விரிந்து கிடக்கும் அந்தமண்டபத்திலிருந்து வெளிவரும் விடுதலை வேட்கைகளின் பிரசவம். எனவே தான் மனிதனின் விடுதலை வேட்கைக்கு வழங்கப்பட்ட பதிலடியாக எமது தலைவன் தாங்கியதாகக் கூறப்படும் கட்டடம் தகர்க்கப்பட்டது. அதவாது வெறும் பௌதீக ரீதியான அழிப்பை மட்டுமே அவர்களால் மேற்கொள்ள முடியும்! எமது உணர்வுகளை அவர்களால் நெருங்கக் கூட முடியாது. ஏனெனில் அது என்றும் அணையாத பெரு நெருப்பு.

அரசும்,அரச படையினரும் தங்களை ஆவிகளை விரட்டும் மந்திரவாதிகளைக் கற்பனை செய்யலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் ஆவிகள் ஆவிகளாகவல்ல மனிதர் களாக உலவுகின்றன. அவை தங்கள் இலட்சிய நோக்கு தொடர்ந்து எல்லா வடிவங்களிலும் முன் செல்வதை எந்த ஒரு மந்திரவாதியாலும் தடுத்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 5



கப்பற்தளத்திலே மணித்தியாலக் கணக்கில் சிந்தனை வயப்பட்டு நின்று, கரை காணாக் கடலின் அந்தமில்லாமல் தொலைவைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அதே நீரின் அசாத்திய வலுவும், அதன் குணாம்சமும் என்னை மலைக்க வைத்தன. பறவை மீன் நீர் மீது சுறுக்காகக் கெந்திக் கெந்தி நீரில் அமுங்குவதையும் நட்பான ஓங்கில்கள் எம் கப்பலுக்கு வழிகட்டிச் செல்வதையும் பார்க்கும் போது, இந்தப் பூமிக்கிரகத்தில் ஒரு பிரத்தியேகமானதும் மிக ரம்மியமானதுமான உயிரின வாழ்க்கை முறை, கடல் வடிவில் நிலவு வதையும் அதில் மனிதன் தற்காலிகமாக யாத்திரீகனாகவும் சில வேளைகளில் உரிமையின்றித் தலையிட்டுத் தொந்தரவு புரிபவனாகவும் வந்து போவதையும் என்னால் அனுமானிக்க முடிகிறது.

நாட்கள் உருண்டோடின. கப்பலும் உழுதோடியது. கடலைப்பார்த்தபடி நிற்பதிலேயே எனது பொழுது பெரும்பாலும் கழியும். அப்படிச் செய்வது என்னை ஈர்த்தது. மகிழ்வூட்டியது. பாலாவுக்கு குமட்டல் குணம் நின்றுவிட்டது. கப்பல் ஓட்டிகளுடன் நன்றாக ஒட்டிக் கொண்டார். கப்பல் முதல்வரின் சிற்றறைச் சீட்டாட்டத்தில் பாலவும் ஒரு கை. எமது பயணத்தின் இந்தக்கட்டத்தில் அவர் நோய்வாய்ப்பட்டிருந்தது தெரிந்தது. ஆனால் அச்சத்தைத் தரும் மருத்துவச் சிக்கல் எதுவும் எழவில்லை. பயணம் முழுவதிலும் மருத்துவ ஆலோசனை துண்டிக்கப்பட்டதால் தவிப்பு நிலை.



இப்பிடியான நிலையில், கடல் நீரில் ஃ 'றெஜிபோம்' பெட்டித்துண்டங்கள், பிளாஸ்டிக் பைகள், மிதக்கும் போத்தல்கள் இவற்றைக் கண்டபோது ஆழமான நிம்மதி மூச்சு! அந்தக் கஞ்சல் கிழிஞ்சல்களைப் பார்த்த போது என்னுடைய அச்சமும் பொறுப்பும் ஒரு முடிவுக்கு வரப்போவதை உணர்ந்தேன். முடிந்த பயணமோ பெரிது! மீதிப் பயணம் சிறிதே!

கடலில் அங்கும் இங்கும் மிதந்து கொண்டிருந்த கஞ்சல்களின் தொகை அதிகரித்து, நிர்மலமான அழகு கெடத் தொடங்க, மனித சமுதாயம் வாழும் தரைக்கு அருகே திரும்பவும் வரத் தொடங்கிவிட்டோம் என்பது புரிந்தது. நுகர்வுப் பொருட்கள் அருந்தலாகவும், தேவை அதிகமாகவும் உள்ளதும், பல ஆண்டுகளாகப் போரினாற் சீரழிக்கப்பட்டதுமான இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்ந்த எனக்கு, அளவுக்கு மிஞ்சிய நுகர்ச்சியினாலும், பொருளாதார வளர்ச்சியினாலும் உருவாகும் புறச்சூழற் பிரச்சினைகள் பற்றிய நேரடி அனுபவம் இருக்கவில்லை. வடக்கில் நிலவும் வீட்டுப் பொருளாதாரத்தில் பொருள் சிக்கனம் இருந்தது. இயற்கை உற்பத்திப் பொருட் களும் கட்டுப்பாடான அளவு பயன்படுத் தப்பட்டன. ஆகவே, வீணாக்கப்படுதல் அங்கு மிகக் குறைவு. சொல்லப் போனால், எங்கும் பசி. எங்கேனும் பணம் இல்லை. இதனால் மூக்கு முட்ட உணவு புசிக்கமுடியாது. சுரண்டிக் கொட்டும் மீதமும் இயற்கைத் துப்புரவாளரான காகத்திற்கு உணவாகிவிடும். வடக்குக்கான மின் விநியோகம், 1990 இல் போர் மூண்டதிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. ஆகவே, புதிய மின் குமிழ்களை வாங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவை மக்களுக்கு இருக்கவில்லை. பிளாஸ்டிக் கழிவுக்குவியலை ஒழித்துக் கட்டும் பிரச்சினையும் இல்லை. உலகத்தோடு ஆண்டுக்கணக் கில் தொடர்பு துண்டிக்கப் பட்டு, யாழ்ப்பாண தீபகற்பத்திலும், வடபாகக் காடுகளிலும் வாழ்ந்த பிறகு, இப்பொழுது புலிப்பொருளா தாரம் எனப்படும் வளரும் நாடு ஒன்றின் பிரதேசக்கடல் எல்லைக்கு அருகாக வந்தோம். அந்தக் கடலில் அதிகம் அதிகமாக இறைந்து மிதந்த கிழிஞ்சல், கஞ்சல்களின் பருமன் அந்த நாட்டின் உளப்பாங்கோடு பின்னிப் பிணைந்த சுகபோக நுகர்வுப் போக்கையே பிரதிபலித்தது. இயற்கை உலகின் வளத்திற்கு இது கேடானது என்ற உணர்வு இப்போக்கில் காணப்படவில்லை.

கடற்பயண இறுதிக்கட்டத்திற்கு தயாராக காத்திருந்தோம். அனைத்துலகக் கடலிலேயே எமது கப்பல் தரித்திருந்தது. நீரில் சலனம் இல்லாமல், கண்ணாடி போல அது பளபளத்தது. இதுவரை எமது பயணம் சுமூகமாகவே இருந்ததால் எமக்கும் ஒரு நிறைவும் மகிழ்ச்சியும் ஆனால், பயணம் இன்னமும் முடியவில்லை. நியாயப்படி பார்த்தால் பயணத்தின் ஆபத்து இனிமேற்றான். சிலநாள் கழித்து எம்மைக் கரைக்குக் கொண்டு போவதற்காக, ஒரு சிறிய இழுவைக்கப்பல் அருகே வந்து ஒட்டியபடி நின்றது. அதில் ஏறி, எமது இறுதித் தளத்துக்குப் புறப்பட்டோம். பல மணிநேரப் பயணம். பாலா படுத்தபடியே பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அவர் ஓட்டியருகே படகுக்காரரோடு அமர்ந்து வெளியே பார்த்தபடி வந்தார். எல்லோரும் விழிப்போடு சுற்று முற்றும் பார்த்தபடி சென்றோம். வெளிநாடு ஒன்றின் கடற் பகுதிக்குள் சட்டவிரோதமாகச் சென்று கொண்டிருந்ததோமாதலால் அகப்படக் கூடாது என்பதற்காக, கரைக்காவலரும் கடற்படையினரும் வருகின்றார்களா எனப் பார்த்தபடியே சென்றோம். கரையை நோக்கி பயணம் செய்த பின், நாம் ஒரு விசைப் படகுக்கு மாற்றப்பட்டோம். ஒரு சிறிய இறங்குதுறைக்கு அது எம்மை வேக மாகக் கொண்டு சென்றது. நாம் நள்ளிரவில் கரைக்கு அருகே சென்றபோது "வற்று" நேரம். கரைக்குச் செல்ல முடியவில்லை. நாம் அடைய வேண்டிய இடத்திற்குச் சென்ற பின்னரும், காத்திருக்க நேர்ந்ததால், அயர்வே ஏற்பட்டது. நீர் அமைதியாக இருந்தது. ஆனால் சூழ்நிலை அமைதியாக இல்லை. சில நூறு யார் தூரத்தில் எமது படகு மிதந்துகொண்டிருந்தது. கரைக் காவலரோ, கடற்படையினரோ இடையில் வந்து விசாரிக்க முற்பட்டால், காட்டுவதற்குச் சட்ட முறையான பத்திரம் எதுவும் எம்மிடம் இல்லை. திடீரென எமது வீரர்களில் ஒருவர் மெதுவாகச் சரிந்து, கடலுக்குள் இறங்கி, காணாமல் போய்விட்டார். எமது சிறிய படகும் நீரோட்டத்தோடு வழியத் தொடங்கியது. போனவர், ஒரு டிங்கியை வலித்தபடியே, பின்னர் எம் அருகே வந்தார். வளைந்து, நெளிந்து டிங்கியிலேறி, தரைதட்டக்கூடிய கரை பார்த்து, டிங்கியில் தரை நோக்கிச் சென்றோம். நள்ளிரவு தாண்டிச் சிறிது நேரத்தில், முன்பின் அறிமுகம் இல்லாத நிலத்தில் நாம் நின்றோம். ஒரு நான்கு சக்கர வண்டி எம் அருகே வந்து நின்றது. பாதுகாப்பான ஓர் இடத்திற்கு அது எம்மை விரைவாகக் கொண்டு சென்றது.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலன்

"எட்டு இலட்சம் பேர் சம்பளமில்லா விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்பதும் கலக்கம் அளிக்கும் செய்தி அல்லவா? அது மாத்திரமல்ல, மேலும் 20 இலட்சம் பணியாளர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் தாமதமாகக் கூடும் என்ற தகவலும் வெளியாகி, அமெரிக்கப் பிரஜைகளின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டது என்றால் அது மிகையில்லை"



# ஒபாமா எதிர்கொள்ளும் சவால்!

"ஒபாமாகெயார்" என்று பரவலாக அறியப்படும். 'நோயாளர் பாதுகாப்பு மற்றும் செலவுகளைத் தாங்கக் கூடிய சுகாதாரப் பராமரிப்புச் சட்டம்' அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வின் அரசியல் தாரக மந்திரமாக அமைந்துள்ளது. கடந்த ஜனாபதிபதித் தேர்தலின் போதும் அவரது பிரசாரத் தொனிப்பொருள் 'ஒபாமாகெயார்' திட்டத்தையே மையமாகக் கொண்டிருந்தது. இச் சட்டமூலம் செயல்வடிவம் பெற வேண்டுமேயானால் அதனைச் செனட்சபையிலும், மக்கள் சபையி லும் அங்கீகரிப்பது அவசியமானதாகும். அத்துடன் அச் சட்ட மூலத்தில் ஜனாதிபதியும் கைச்சாத்திட்டால் மாத்திரமே அது சட்டமாகும்.

'ஒபாமா கெயார்' சட்ட மூலத்திற்குச் செனட்சபை அங்கீகாரம் அளித்திருக்கிறது. ஆனால் அதனைப் பிரதிநிதிகள் சபையில் அங்கீகரிப்பதில் தான் சிக்கல். செனட் சபையில் ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவர்களது எண்ணிக்கை அதிகம். பிரதிநிதிகள் சபையில் குடியரசுக் கட்சியின் கைமேலோங்கியுள்ளது.

'ஒபாமாகெயார்' சட்டமூலத்தை ஆட்சேபிக்கும் குடியரசுக் கட்சியின் அங்கத்தவர்கள் அதன்மீது அடுத்தடுத்து திருத்தங்களைப் பிரேரித்து வருகின்றனர். அதனை எப்படியாவது தடுத்து நிறுத்திவிடவேண்டும் என்பதே குடியரசுக்கட்சி அங்கத்தவர்களின் நோக்கமாக இருக்கிறது. இதற்காக கட்சியின் அங்கத்தவர்கள் அடுத்தாண்டுக்குரிய நிதிச் செலவீன சட்ட மூலத்தை அஸ்திரமாகப் பிரயோகித்து இருக்கின்றனர். 'ஒபாமா கெயார்' திட்டம் தொடர்பாகத் தாம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு அடிபணிந்தால் மாத்திரமே நிதிச் செலவீன சட்டமூலத் திற்கு அங்கீகாரம் அளிக்க முடியும் எனக் குடியரசுக் கட்சியினர் வலியுறுத்திக் கூறி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது எந்தவேளையிலும் சாத்தியமே. ஜனநாயகக் கட்சி மற்றும் குடியர சுக் கட்சி ஆகிய இரு தரப்புக்களும் மனது வைத்தால் போதுமானது. ஆனால் இரு தரப்புக்களும் இதனைக் கௌரவப் பிரச்சினையாகக் கருத்திப் பிடிவாதம் பிடிப்பதால் முடக்க நிலை நீடிக்கக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

இம் முடக்க நிலையால் அமெரிக்கப் பொருளாதாரத்துக்குச் சராசரியாக நாளொன்றில் ஏற்படும் பாதிப்பு 300 மில்லியன் டொலர்களாகுமெனப் பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்நிலை ஒரு மாதத்துக்கு நீடிக்குமானால் அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீத பாதிப்பு ஏற்படக்கூடும்.

அமெரிக்காவின் படுகடன் என்பதும் பிரச்சினைக்குரியவிடயமாகும். அந்நாட்டின் அரசியல் யாப்பிற்கு அமைய அரசாங்கம் 16.7 ட்ரில்லியன் டொலரை மாத்திரமே கடனாகப் பெறமுடியும். தற்போதைய நிலை தொடருமேயானால் இம்மாத நடுப்பகுதிக்குள் அந்த எல்லையைத் தாண்டிச் சென்றுவிடக் கூடிய நிலையில் அரசாங்கம் உள்ளது. உச்சக்கடன் வரம்பை அதிகரிக்க வேண்டுமாயின் மக்களவையின் இரு சபைகளிலும் சட்டமொன்றை நிறைவேற்றுவது அவசியமாகும்.

இதற்குரிய சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டாலும் ஜனாதிபதியும் குடியரசுக் கட்சியும் முரண்படக்கூடிய வாய்ப்பு அதிகம் என்பது தான் சிக்கலுக்குரிய விடயமாக உள்ளது. எனவே சமகாலமுடக்கு நிலை காரணமாக படுகடன்களைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலைக்கு அமெரிக்கா தள்ளப்படும் அபாயமும் உள்ளது.

## அரச முடக்கம் என்றால் என்ன?

அமெரிக்காவின் அரசியல் யாப்பைப் பொறுத்த வரையில் ஒரு நிதியாண்டுக்கான செலவீனங்களுக்கு மக்களவையில் அங்கீகாரம் பெறவேண்டும். இம்முறை கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் காங்கிரஸ் என்றழைக்கப்படும் மக்களவையில் அடுத்த நிதியாண்டுக்குரிய செலவீனங்களை அங்கீகரிக்க முடியாமல் போயுள்ளது. காங்கிரஸ் என்பது, பிரதிநிதிகள் சபை, செனட்சபை என்ற இரு சபைகளைக் கொண்டதாகும். இவ் இரண்டு சபைகளிலும் நிதிச் செலவீன சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அத்தியாவசியமற்ற சேவைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்க முடியும்.

சட்டமூலம் அங்கீகரிக்கப்படாத நிலையில் அரச சேவைகள் பகுதியளவில் முடங்குவதை 'அரச முடக்கம்' எனக் கூறலாம். இதன்மூலம் சுகாதாரப் பராமரிப்பு, பாதுகாப்பு முதலிய அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படுவதில்லை என்பதையும் ஞாபகத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

இந்த நிலையில் எட்டு இலட்சம் பேர்கள் அளவில் சம்பளமில்லா விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்பதும் கலக்கம் அளிக்கும் செய்தி அல்லவா? அது மாத்திரமல்ல, மேலும் 20 இலட்சம் பணியாளர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் தாமதமாகக் கூடும் என்ற தகவலும் வெளியாகி, அமெரிக்கப் பிரஜைகளின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டது என்றால் அது மிகையில்லை.

அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் அரச முடக்கம் என்பது ஒன்றும் புதிதான விடயமல்ல. இதுவரையில் 17 தடவைகள் அரசசேவைகள்பகுதியளவில்முடங்கியிருக்கின்றன. கடைசியாகப் பில்கிளிங்டனின் ஆட்சிக் காலத்தில் 1995 ஆம் ஆண்டு இத்தகையதொரு நிலை ஏற்பட்டது. ஆனால் இம்முறை சிக்கலானதாக இருப்பதை அமெரிக்கப் பிரஜைகள் அறிந்துள்ளனர். முன்னைய சந்தர்ப்பங்களைப் போலல்லாது முடக்க நிலையின் பின் விளைவுகள், அரச முடக்கம் என்ற நிலை அமெரிக்காவின் அரசியலை மென்மேலும் சிக்கலாக்கி, பொருளாதாரத்தையும் அதாளபாதாளத்தில் தள்ளிவிடக்கூடிய அபாயம் இருப்பது அவர்களுக்கே தெரியும்.

இந்த நிலைமைக்கு யார் காரணம் என்று கேட்டால் குடியரசுக்கட்சிதான் என்று எளிதிற் கூறிவிடமுடியும். 'ஒபாமா கெயார்' விவகாரத்தில் பிடிவாதத்தைத் தளர்த்தினால், இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். குடியரசுக் கட்சியின் பிடிவாதத்தை எந்த விதத்திலும் சட்டவிரோதமானது எனக் கருதமுடியாது. தமது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பொருத்தமற்றதாகக் தாம் கருதும் ஒரு சட்ட மூலத்தை ஆட்சேபிக்கும் உரிமை அதற்கு உண்டு. அப்படியானால், தவறு எங்குள்ளது? அரசியல் யாப்பில் தானென நிபுணர்கள் கூறுகின்றனர். 1787 ஆம் ஆண்டு வரையப்பட்ட அரசியல் யாப்பின் பிரமாணங்கள் சமகாலத்திற்குப் பொருத்தமானவையாக இல்லை என்பதே அவர்களின் வாதமாகவுள்ளது.

அமெரிக்க அரசியல் யாப்பின் அடித்தளமாக அமையும். ஜனநாயகம் பற்றிய எண்ணக்கரு, ஒரு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் மாத்திரம் மக்களைப் பாதுகாப்பதற்குப் போதுமானதல்ல என்ற அடித்தளத்தில் அமைந்ததாகும். அதாவது ஒரு தேர்தல் மூலம் பெரும்பான்மையை, சிறுபான்மை என்ற பேதம் ஏற்பட்டு, பெரும்பான்மைப் பலத்தை உடையவர்கள் சிறுபான்மையினரை ஒடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதென ஜேம்ஸ் மெடிசன் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி, சட்டவாக்க அதிகாரமுள்ள செனட்சபை, பிரதிநிதிகள் சபை ஆகிய மூன்று கூறுகளை ஏற்படுத்தி, அவை ஒன்றையொன்றைக் கட்டுப்படுத்தக்கூடிய ஏற்பாட்டின் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியும் என்ற இலக்குடன் ஜேம்ஸ் மெடிசன் அரசியல் யாப்பை வரைந்தார். அதன் பிரகாரம் ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்கின்றார்கள்.

செனட் சபைக்கான அங்கத்தவர்களையும், பிரதிநிதிகள் சபைக்கான அங்கத்தவர்களையும் தனித்தனியாக மக்களே தெரிவு செய்வது வழக்கம். அவை மூன்றும் தனித்தனியான அதிகாரங்களையும் தனித்தனியாக மக்களே தெரிவு செய்வது வழக்கம். அவை மூன்றும் தனித்தனியான அதிகாரங்கங்களைக் கொண்டிருக்கின்றன. அந்த அதிகாரங்கள் ஒள்றையொன்று தாண்டிச் செல்ல முடியாது. அத்தகைய ஏற்பாடானது ஒவ்வொரு அமைப்பும் எல்லை மீறிச் செல்வதைக் கட்டுப்படுத்தக் கூடிய கடிவாளமாக அமைவது ஒரு புறமிருக்க, அதுவே ஒவ்வொரு அமைப்பும் தத்தமது பலத்தை நிரூபிப்பதற்கான பலப்பரீட்சையில் ஈடுபடும் வாய்ப்பையும் வழங்கி நிற்பதை மறுக்க முடியாது. நிதிச் செலவீனச் சட்டமூல விவகாரத்தில் ஏற்பட்டிருப்பதும் இதே நிலைமையே. இதனை ஒரு விதத்தில் ஜனாதிபதி ஒபாமாவிற்கும் எதிரணியில் இருக்கும் குடியரசுக் கட்சிக்கும் இடையிலான பலப்பரீட்சையாகக் கருத முடியும்.

நியூசிலாந்து, நோர்வே, இஸ்ரேல், சுவீடன் ஆகிய நாடுகளை ஆராய்ந்தால் இந்த நாடுகளின் நாடாளுமன்றங்களில் இரு சபைகள் கிடையவே கிடையாது. இவற்றிற்கும் கடிவாளம் உண்டு. கடிவாளம் இடுபவர் நாடாளுமன்ற அதிகாரங்களைத் தாண்டிச் செல்லக் கூடியவரல்லர். பெரும்பாலும் ஆட்சி பீடத்தை அதிகாரங்கள் இன்றி அலங்கரிக்கும் மன்னர் அல்லது ஜனாதிபதிக்கே அத்தகைய பொறுப்பு வழங்கப்படுகிறது.

ஐக்கிய இராச்சியம், ஜப்பான், ஜேர்மனி, ஸ்பெயின், கனடா போன்ற நாடுகளில் நாடாளுமன்ற மேற்சபை உண்டு. அவை கீழ்ச் சபையை விடவும் குறைந்த அதிகாரங்களையே கொண்டவையாக உள்ளன. கீழ்ச் சபையின் தலைவரே, அதாவது பெரும்பாபலும் பிரதமரே நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவ ராகக் காணப்படுகிறார். மேற்குறிப்பிட்ட நாடுகளில் நெருக்கடிகள் இல்லாமல் இல்லை. ஆனால் அரச சேவைகள் முடங்கி எட்டு இலட்சம் பேர்கள் வரை சம்பளம் இல்லாமல் வீட்டுக்கு அனுப்பப்படும் அளவுக்கு அரசியல் யாப்பு ரீதியான பிரச்சினைகள் இல்லவே இல்லை.

அமெரிக்க அரசநிறுவனங்கள் மூடப்பட்டமை குறித்து ஜனநாயகக் கட்சியினரும், குடியரசுக் கட்சியினரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி வருகின்ற நிலைமையில் பென்ரகன் 4 இலட்சம் பணியாளர் களை வேலைக்குத் திரும்புமாறு உத்தர விட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சர் சர்ஹேகல் தெரிவித்துள்ளார். அதேவேளையில் அரசதுறை முடக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதி ஒபாமா தற்காலிக மாகக் கடன்வரையறையை உயர்த்த அமெ ரிக்க நாடாளுமன்றில் சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக். 16, – 22, ஒக்., 2013
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

## எப்போதும் மிஞ்சுவது ஏமாற்றமே

வடமாகாண அமைச்சுப் பதவிப் பங்கீடுகள் கூட்டமைக்குள் பெரும் பிளவை ஏற்படுத்தி விட்டது. இதன் விளைவுதான் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பதவிப் பிரமாண நிகழ்வை ஒன்பது உறுப்பினர்கள் புறக்கணித்த விடயம். தமக்கோ தமது உறவுகளுக்கோ அமைச்சுப் பதவிகளைக் கோரி, அது முடியாமல் போனதால் தான் இந்த ஒன்பது உறுப்பினர்களும் கூட்டமைப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள் என்று சாடைமாடையாகப் பதவியேற்பு வைபவத்தில் வடக்கு முதல்வர் சொல்லியிருந்தார்.

இதற்கு அடுத்த நாள் கூட்டமைப்பின் ஜனநாயக அணி என்று தம்மை அடையாளப் படுத்திக்கொண்ட இந்த ஒன்பது உறுப்பினர்களும் ''நாங்கள் சுயலாபத்துக்காக இந் நிகழ்வைப் புறக்கணிக்கவில்லை. தமிழரசுக் கட்சி சர்வதிகாரத்தோடு நடந்துகொண்டமையாலேயே இப்படி நடக்க வேண்டியதாயிற்று. பதவி ஏற்காத ஒன்பது உறுப்பினர்களும் எமது ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் பதவியேற்பார்கள்'' என்று அறிவித்தார்கள். ஆனால், அடுத்த நாளே அந்த அறிவிப்பை எட்டு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள, சிவாஜிலிங்கம் மட்டும் தனி ஆளாக முள்ளிவாய்க்காலில் பதவியேற்றார். எஞ்சியோர் முதல்வர் முன்னிலையில் பதவியேற்பர் என்று தெரியவருகிறது.

இப்படி மாகாணசபையின் அமர்வுகள் ஆரம்பமாக முதலே கூட்டமைப்பு கூறுகளாகப் பிளவுபடத் தொடங்கிவிட்டது. தனியே கூட்டமைப்பு மாத்திரமன்றி அதில் அங்கம் வகிக்கும் உதிரிக் கட்சிகள்கூட தமக்கிடையே முரண்பட்டு, பிளவுபட்டு நிற்கின்றன. குறிப்பாக ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற கட்சிகள் உட்கட்சி முரண்பாடுகளால் உடைவுறும் நிலையைச் சந்தித்துள்ளன.

இப்படித் தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொள்ளும் கட்சிக்காரர்களுக்கு மாகாண சபையின் ஆயுளான ஐந்து வருடங்களும் தங்களுடைய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளவே சரியாக இருக்கும். மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்க எங்கே நேரமிருக்கப் போகிறது. இவர்கள் தங்களுடைய அடிபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கிடையில் அடுத்த தேர்தல் வந்துவிடும். மீண்டும் ஒற்றுமை என்ற முகமூடியை அணிந்துகொண்டு மக்களை மயக்கி வாக்குவேட்டையில் இறங்கிவிடுவார்கள். பாவம் மக்கள் தான் எப்போதும் விடிவு வரும் என்று எண்ணி ஏமாந்தபடியே இருக்கப் போகிறார்கள்.


அனுஷ்கன்

# எல்லாளன் நடவடிக்கை:

## பகையின் குகையில் மூட்டிய பெருநெருப்பு

அனுராதபுரம் விமானத்தளம் தமிழர் நிலங்களில் அகலக்கால் நீட்டி ஆக்கிரமிப்பு வெறியில் இருந்த சிங்கள படைகளின் பிரதான விநியோக மையம். சுற்றிவர மூன்றடுக்கு முட்கம்பி வேலிகள், தடுப்பரண்கள், கண்ணிவெடிவயல்கள், திருப்பு அரண்கள் என்பவற்றைத் தன்ன கத்தே கொண்டு அனுராதபுரம் நகரிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் நுவரவெவ குளத்திற்கு மிக அருகாமையில் பெருமளவு நிலங்களை விழுங்கி அகன்று விரிந்திருந்தது அந்த விமானப்படைத் தளம். தாக்குதல் உலங்குவானூர்தி மையம், ஆளில்லா வேவு விமானம் பீச்கிராப்" எனப்படும் கண்காணிப்பு விமானம் என்பவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் நவீன புலனாய்வு தகவல் சேகரிப்பு மையம் என்பனவற்றைத் தன்னகத்தே கொண்டு சிங்கள தேசத்தின் இரும்புக்கோட்டையாக அனுராதபுரம் படைத்தளம் விளங்கியது. தமிழர்களின் வான் பரப்புக்குள் அத்துமீறிப் புகுந்து கேட்டுக் கேள்வியின்றி அப்பாவி மக்களை வயது வேறுபாடின்றி கொன்று குவிக்கும் விமானங்களுக்கான புலனாய் வுச் செயற்பாடுகளும் இங்கிருந்தபடியே மேற்கொள்ளப்பட்டன. எனவேதான் இத்தளத்தை எப்படியாவது தாக்கி தமிழர் பிரதேசத்தின் மீதான விமான இன அழிப்பை தடுக்க வேண்டும் என்ற எண்ணம் போராளிகள் மனதில் உருவாகியது. இதற்குச் செயல்வடிவம் கொடுக்குமாறும் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் தளபதிகளுக்கு உத்தரவிட்டது.

முதல் கட்டமாக தாக்குதலுக்கான வேவு நடவடிக்கைளை மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகள் களமிறக்கப்பட்டனர். இப் பொறுப்பு அனுராத புரத்தின் எல்லாப் பகுதிகளையும் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தவரும் புலிகளிகளின் முன்னணித் தாக்குதலுக்கெல்லாம் வேவு நடவடிக்கைகளைத் திறம் பட முடித்துக் கொடுத்தவருமான தமிழ்மாறனிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தது. தமிழ்மாறனின் வேவுச் செயற்பாடுகள் தலைமையையே ஆச்சரியப்பட வைக்கும் அளவுக்கு திறமை மிகுந்ததாக இருந்தது. அரச படைகளுக்கு அருகிலேயே படுத்துறங்கி அவர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து தலைமைக்குத் தகவல் சொல்வதில் தமிழ்மாறனை அடிக்க ஆள் கிடையாது. எட்டு மாதங்கள் மேற்கொள்ளப்பட்ட தீவிர வேவு நடவடிக்கைகளின் பின்னர் தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டது. தாக்குதல் திட்டத்தை வடிவமைக்கும் பொறுப்பு விடுதலைப்புலிகளின் படைப் புலனாய்வுப் பிரிவுத் தளபதிகளில் ஒருவராகிய ரட்ணம் மாஸ்ரரிடம் ஒப்படைக்கப்பட்டது. தாக்குதல் அணிகளும் தயார் செய்யப்பட்டன. இந்தக் கரும்புலி அணிகளில் 21 பேர் உள்ளீர்க்கப்பட்டனர். இவர்களுக்கான பயிற்சிகள் புதுக்குடியிருப்பு காட்டுப் பகுதியிலுள்ள அல்பா- 1 படைத்தளத்தில் நீண்ட காலமாக வழங்கப்பட்டன. கரும்புலி அணிக்கான தலைமைப் பொறுப்பு பல தாக்குதல்களில் பங்குபற்றிய அனுபவமும் திறமையும் வாய்ந்த கேணல் இளங்கோவிடம் வழங்கப்பட்டது. தாக்குதலுக்கான நாளும் குறிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட போராளிகள் எந்தவித சலனமும் இன்றித் தலைவருடன் ஒளிப்படம் எடுக்கும் நாளுக்காக காத்திருந்தனர். அந்த நாளும் வந்தது. அடுத்த நாள் வெடியாகப் போகின்றோமே என்ற எந்த சலனமும் இன்றி தலைவரையும் தளபதிகளையும் கட்டித் தழுவி தாய்மண்ணை விழுந்து முத்த மிட்டு வரலாற்றுப் பணிக்காக 20 ஆம் திகதி பிற்பகல் விடைபெற்றுக் கொண்டனர்.




**22 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 2007 ஆம் ஆண்டு அதிகாலைப் பொழுது**

அன்றைய திங்கட்கிழமை பேரினவாத அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் என யாருமே எதிர்பார்க்கவில்லை. கரும்புலிகள் வில்பத்துக் காட்டுப் பகுதியூடாக அனுராதபுரம் நகருக்குள் காலடி எடுத்து வைத்தனர். தமிழ் மன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



னான எல்லாளன் அரண்மனை அமைத்து படை நடத்தி தமிழர் தம் வீரத்தை உலகுக்குப் பறை சாற்றிய நகருக்குள் தமிழ்ப் புலிகளின் பாதங்கள் நகர்ந்தன. எல்லோர் முகங்களும் தாம் செய்யப் போகும் வரலாற்றுக் கடமைக்கான ஆர்வத்தில் பிரகாசித்தன. கைகளில் நவீன ரகத் துப்பாக்கி கள், கைக்குண்டுகள், இலகுரக டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், இலக்குகளை துல்லியமாகத் தாக்கக் கூடிய சினைப்பர், நவீன ரக செய்மதித் தொலை பேசிகள் பளிச்சிட்டன. எம்மினத்தைக் கொத்துக் கொத்தாக வேட்டையாடியவர்களை அவர்களின் குகைக்குள்ளேயே சென்று சந்திக்கும் துணிவும் வேகமும் எல்லாப் போராளிகளிடத்தும் இழையோடிப் போயிருந்தது. அனுராதபுரம் தளத்திற்கு அண்மையான பகுதிக்குள் ஊடுருவிய அணிகள் தளத்தின் அருகிலுள்ள தென்னம் தோப்பு ஒன்றுக்குள் தலைமையின் உத்தரவுக்காக காத்திருந்தனர். சில நிமிட காத்திருப்பின் பின் கிடைத்தது தாக்குதலுக்கான கட்டளை. அப்போது நேரம் அதிகாலை 2 மணியைத் தொட்டிருந்தது. அந்த இருளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அணிகள் அனுராதபுரம் நெளுக்குளம் வீதியைக் கடந்து தளத்தின் வடக்குப் பக்க முட்கம்பி வேலிக்கருகில் பதுங்கி நிலையெடுத்துக் கொண்டனர். சிறிது சிறிதாக சத்தம் சந்தடி இன்றி முட்கம்பி வேலியை வெட்டி அகற்றி தாம் ஊடுருவுவதற்கு வசதியாகப் பாதை அமைத்து அதனூடாக உட்சென்று தளத்தின் வெளிப்பகுதியில் காத்துக்கிடந்தனர். வழமையாகப் பாதுகாப்பு அரண்களில் புலிகள் ஊடுருவிடுவார்களோ என்று கண்ணில் எண்ணெயை விட்டபடி காவல் இருக்கும் சிப்பாய்கள் அன்றைக்கு எல்லாவற்றையும் மறந்து போனவர்களாக விடிய விடிய சிரச' தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த சுப்பார்ஸ்ரார்' இசை நிகழ்ச்சியின் இறுதிப்போட்டியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். அதனால் காவலரண்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இது கரும்புலிகளுக்கு இன்னும் வசதியாகிவிட்டது.

முதலாவது முட்கம்பி வேலியையை வெட்டி முடித்தாயிற்று. அடுத்த வேலி சுமார் 8 அடி தூரத்தில் தளத்திற்குச் சமாந்தரமாக அமைந்திருந்தது. இரண்டுக்கும் இடையில் நேர் எதிராக மின் வேலியும் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த வேலிக்கான மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் இந்த இரு வேலிகளும் வெற்றிகரமாக வெட்டி அகற்றப்பட்டன. காற்றாக மாறி தளத்துக்குள் புகுந்த புலிகளின் அணிகள்,அங்கு புதைக்கப்பட்டிருந்த சத்த வெடிகளையகற்றி தளத்தின் பாதுகாப்புப் பொறிமுறையை பலவீனப்படுத்தினர். இவையனைத்தும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்டன .

வெற்றிகரமாக ஊடுருவிய அணிகள் இரண்டாகப் பிரிந்தன. அதில் ஓர் அணி விமானப் படையினர் தங்கியிருந்த பதுங்கு குழிகளுக்கு பின் பக்கமாக நிலையயடுத்துக் கொண்டது. மற்றைய அணி பதுங்கு குழிகளுக்குக் கீழாக ஊர்ந்து சென்று விமான ஓடுபாதை நோக்கி நகரத் தொடங்கியது. இந்த அணி வேகமாக நகர்ந்து வானூர்தி தரிப்பிடங்களை அடைந்து தாக்குதலுக்காக நேரத்துக்காக காத்திருந்தன. எல்லோரும் எதிர்பார்த்திருந்த கட்டளை கிடைத்தது.

அடுத்த கணத்தில் அனுராதபுரம் வெடியோசைகளால் அதிரத்தொடங்கியது. பதுங்குகுழிகளுக்கு பின்னால் நிலை எடுத்திருந்த அணிகளின் கைகளில் இருந்த இயந்திரத் துப்பாக்கிகள் விமானப்படையை நோக்கி சடசடக்கத் தொடங்கின. இந்த அணிவீரர்கள் உறக்கத்தில் இருந்த விமானப் படையினரை ஒரேயடியாக தூங்க வைத்தபின் தளத்தினுள்ளே வானூர்தி மையத்தில் நிற்கும் பிரதான தாக்குதல் அணியுடன் இணைந்துகொண்டனர். பதுங்கு குழிகளில் நின்ற விமானப் படையினரின் கதை முடிந்ததால் தளத்தில் தொடர்ந்தும் கரும்புலிகள் முன்னேறுவதைத் தடுக்க எவரும் இருக்கவில்லை. வேகமாக நுழைந்த இரு அணிகளும் ஒரு கட்டத்தில் இணைந்து அங்கு நிறுவப்பட்டிருந்த விமான எதிர்ப்பு நிலைகள், பீச்கிராப் விமானத்தின் மையம் தளத்தின் தீயணைப்பு மையம், பராலைட் ஏவும் மையம் என்பவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன. என்ன நடக்கிறது, ஏது நடக்கிறது என்று விமானப்படை ஊகிப்பதற்கிடையில் நிலைமை கைமீறிப்போயிருந்தது.

இந்த நிலையில் படைத்தரப்புக்கான அடுத்த அதிர்ச்சி வைத்தியமும் காத்திருந்தது. தமிழர்களின் வான்படைவீரத்தை உலகறியச் செய்த வான்புலிகளின் இரு வான்கலங்கள் முல்லைத் தீவிலிருந்து மேலெழுந்து அனுராதபுரக் களமுனை நோக்கி தமது சிறகை விரிக்கத் தொடங்கின. இவை இரண்டும் முல்லைத்தீவு கடற்பரப்புக்கு அண்மையாக பறந்து வவுனியா வான்பரப்புக்குள் சடுதியாக நுழைந்து கொண்டன. இரண்டுவிமானங்களின் பேரிரைச்சலும் வவுனியா நகரத்தையே பீதிக்குள்ளாக்கின. இந்நிலை யில் வவுனியா படைத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு இந்திய ரேடர்களும் வான்புலிகளின் விமானங்களை காட்டிக் கொடுத்தன. ஆனால் பேய்க்குப் பேன் பார்த்துக் கொண்டிருந்த படைத்தரப்பு அந்த அபாய அறிவிப்புக் குறித்து எந்தச் சிரத்தையையும் எடுக்கவில்லை. வவுனியா வான்பரப்பு ஊடாக மிகிந்தலை காட்டுக்குமேலாகப் பறந்த விமானங்கள் அனுராதபுர படைத்தளத்தை நெருங்கி படையினர் நிலையெடுத்திருந்த பகுதிகளில் துல்லியமாக அடுத்தடுத்து மூன்றுக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசிச் சென்றன. வான்புலிகளின் விமானத்தைக் கண்டவுடனேயே விமானப்படைக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. எப்படியாவது உயிர்பிழைப்பதே உத்தமம் என நினைத்து எஞ்சியிருந்த விமானப்படையினர் தளத்தில் இருந்து ஓட்டம் பிடித்தனர். புலிகள் ஒவ்வொரு தளமாகத் தேடித் தேடி, விமான வல்லூறுகளை வேட்டையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்தக்கரும்புலிகள் அணியில் இருந்த போராளி ஒருவன் தன்னோடு கொண்டு சென்றிருந்த புலிக்கொடியை தளத்தின் பிரதான தொலைத் தொடர்புக் கோபுரத்தின் உச்சியில் ஏற்றி புலிகளின் வெற்றியை பறைசாற்றினான்.

> “
> வெற்றிகரமாக ஊடுருவிய அணிகள் இரண்டாகப் பிரிந்தன. அதில் ஓர் அணி விமானப் படையினர் தங்கியிருந்த பதுங்கு குழிகளுக்கு பின் பக்கமாக நிலையெடுத்துக் கொண்டது. மற்றைய அணி பதுங்கு குழிகளுக்குக் கீழாக ஊர்ந்து சென்று விமான ஓடுபாதை நோக்கி நகரத் தொடங்கியது. இந்த அணி வேகமாக நகர்ந்து வானூர்தி தரிப்பிடங்களை அடைந்து தாக்குதலுக் காக நேரத்துக்காக காத்திருந்தன. எல்லோரும் எதிர்பார்த்திருந்த கட்டளை கிடைத்தது.
> ”

நீண்டநேரமாக தங்களின் தளத்துக்கு மேலே துணிச்சலுடன் வட்டமிட்டுக் கொண்டிருந்த வான்புலிகளின் விமானங்களைப் பிடிப்பதற்காகக் கிளம்பிய ஹெலிகளில் ஒன்று மிகிந்தலைக் காட்டுக்குள் வெடிபட்டு விழுந்து நொருங்கியது. எல்லாப்பக்கமும் இழப்புகள் மட்டுமே அரசுக்கு எஞ்சியது. இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் ஆடிப்போனது படைத்தரப்பு. களமுனைகளில் நின்ற படைகளும் கரும்புலிகளின் அதிரடிகளை கைகட்டி வேடிக்கை பார்க்கவே அன்று முடிந்திருந்தது. எவ்வளவு நேரம் தான் அவர்களாலும் பொறுக்க முடியும். மேலதிக படைகளை அனுப்புங்கள். புலிகளிடமிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என உயிர்ப்பயத்துடன் வவுனியா படைத்தளபதி பிரிகேடியர் உபால்எதிரிசிங்காவைத் தொடர்பு கொண்டு கத்தினார் அனுராதபுர விமானப்படைத்தலைமையகத் தளபதி குரூப் கப்டன் பிரியந்த குணசிங்க. ஆனாலும் உள் நுழைந்த கரும்புலி அணிகளைக் கட்டுப்படுத்துவது படைத்தரப்புக்கு இலகுவாக இருக்கவில்லை. தளத்தினுள் வேட்டையில் குதித்திருந்த கரும்புலிகளும் வேகமாக வானூர்திகளைத் தேடித்தேடி அழித்துக் கொண்டேயிருந்தனர்.

அன்றைய நாளின் காலைப் பொழுதிலேயே கண்முன்னால் கோடிக்கணக்கான ரூபா தீயில் கருகுவதை வாய்பொத்தி கைகட்டி பார்த்துக் கொண்டிருக்கவே காலம் படைத்தரப்புக்குக் கட்டளையிட்டிருந்தது. விடிந்தவுடன் ஏழு மணிக்கே வெளியில் இருந்து இரா ணுவ அணி ஒன்று படைத்தளத்துக்குள் புக முடிந்தது. மேஜர் சந்திமால் பீரிஸ், கோசல முனசிங்க தலைமையிலான அணிகளே இவ்வாறு உள்நுழைந்து கொண்டன. போதாக் குறைக்கு கஜபாறெஜிமன்ட்டும் உதவிக்கு அழைக்கப்பட்டது.

ஆனால் மதியம் வரை கரும்புலிகளின் அதிரடிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லா விமானங்களும் எரிந்து முடிய தாங்கள் கட்டியிருந்த தற்கொலை அங்கிகளை வெடிக்க வைத்து தாயக மண்ணுக்காக விழி முடிக் கொண்டனர் கரும்புலி மறவர்கள். ஒரே இரவில் பல விமானங்களை ஹெலிகொப்ரர்களை பறி கொடுத்த ஆத்திரத்தை யார் மீது காட்டுவது எனத் தெரியாமல் போராளிகளின் சடலங்களை நிர்வாணமாக்கி தன் இயலாமையுடன் கூடிய ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டது அரசு.

'எல்லாளன் நடவடிக்கை' எனப் பெயரிடப்பட்ட இந்தத்தாக்குதலில் 10 வானூர்திகள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன. இன்னும் 13 வானூர்திகள் திருத்தவே முடியாதளவுக்கு சேதமாக்கப்பட்டன. எல்லாளன் நடவடிக்கையில் களத்தில் 27 கரும்புலிகள் தாக்குதலில் ஈடுபட்ட போதும், படைத்தரப்பால் 21 உடல்களையே கண்டு பிடிக்க முடிந்தது. ஏனைய 6 கரும்புலிகளும் தாக்குதலை முடித்துக் கொண்டு, அது தொடர்பான வீடியோக் களுடன் வெற்றிகரமாக மீண்டும் தளம் திரும்பியிருந்தனர்.

ஈழத்தை அதிககாலம் ஆட்சி செய்த தமிழ்மன்னன் என்ற பெருமையைப் பெற்றிருந்த எல்லாள மன்னன் வீழ்ந்து போன மண்ணில் அந்த மன்னனின் பெயரிடப்பட்ட நடவடிக்கை மூலம், மீண்டும் தமிழர்களின் வீரத்தை கரும்புலிகள் உலகறியச் செய்து, 6 வருடங்கள் கடந்துவிட்டது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு, தோற்றுப்போன இனமாக அடையாளப்படுத்தப்படும் எம்மினத்துக்கு இந்த வெற்றிகளின் நினைவுமீட்டல்கள் தான் இப்போதைக்கு ஒத்தடமாக இருக்கப்போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...

## உன்னை நான் பிரிந்தால்.....

சத்தியமாய் சொல்கிறேன்
உன்னை நான் பிரிந்தால்
உன்னையே நினைத்துக் கொண்டு
இருக்கவே மாட்டேன் - ஆனால்
இன்னொருவனை என் மனதில்
நினைத்துக் கொண்டு வாழும்
கேவலமான வாழ்வை எண்ணிப்
பார்க்கவும் மாட்டேன்- உன்னை
ஓர் நொடி கூட நினைக்கவே
மாட்டேன் - ஆனால் நீ
என்னை மறந்து விட்டாய்
என நினைத்துக் கொண்டு
வாழவும் மாட்டேன் - நீ
என்னோடு இணைய மாட்டாய்
என எண்ணி வேறொருவனுக்கு
என் கழுத்தை நீட்டவும் மாட்டேன்
நீ என்னிடம் விட்டுச் சென்ற
உன் ஏக்கங்களோடு என்
வாழ்நாளைக் காதலித்துக்
கொண்டிருப்பேன்....

கே.சர்மி, வேரவில்

## காதலும் பின்னே மோதலும்....!!!

—சுபிதி—



காதல் என்பது பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினத்திலும் உள்ளது. மனிதர்களிடத்தில் அது மகத்தானதாக உள்ளது.

ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாகக் காதலில் விழுந்திருப்பான். அதில் சந்தேகமில்லை.

பணம், பகுத்தறிவு, சூழல் ஆகியவற்றை மையமாகக் கொண்டே இன்றைய காதல்கள் பெருமளவு வளர்ந்துகொண்டுள்ளன.

சில விதிவிலக்குகளும் உண்டு. பார்த்ததும் காதல் வகையைச் சார்ந்தது இது.

காதலிக்கப்படுபவர் ஏதேனும் ஒரு வகையில் கவர்ச்சியை உருவாக்கியதால் ஏற்பட்ட விளைவு அது.

சரி.. காதல் பற்றி பிரச்சினைகளை எப்படிச் சமாளிக்க வேண்டும்?

மூன்றாமவருக்குத் தெரியாமலேயே இத்தகைய விடயங்களைப் பேசி முடிக்க வேண்டும். சினிமா வேறு.. இயல்பு வாழ்க்கை வேறு என்பதை நாமும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.. !

ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகள் பருவ வயதை கடக்கும்போது எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் இவைகள்.

சில பெற்றோருக்கு அதிர்ஷ்டம் துணை நிற்கிறது.பிள்ளைகள் ஒழுக்கமாக வளர்கிறார்கள்.. பல பெற்றோர்களுக்குச் சூழல் எதிராக அமைந்துபோகிறது. பிள்ளைகளும் சற்றே ஒழுக்கநெறியினின்றி விலகிவிடுகிறார்கள்.

சிலர் சாதுர்யமாக தங்கள் பிள்ளைகளின் காதலை எதிர்கொள்கிறார்கள். சிலர் மிரட்டி, உருட்டிப் பணிய வைக்கிறார்கள். காதல் மனநிலையில் உள்ளவர்களை இப்படி தங்களின் விருப்பத்திற்கேற்ப மாற்றுவது என்பது "மலையை தலையால் உடைத்து சிதறச் செய்வதற்கு" ஒப்பானதுதான்.

சிலருக்கு சாத்தியமாகிறது. மிகப் பலருக்கோ விபரீத விளைவுகள்தான் உண்டாகின்றன.

பிரச்சினை வீட்டிற்குள் இருக்கும் வரைக்கும் யாருக்கும் தெரியாது.

வீதிக்கு வந்துவிட்டாலோ பிரச்சினை அதிகரித்து விடுகிறது...

சும்மாவா சொன்னார்கள்.. "உலை வாயை மூடலாம்.. ஊர் வாயை மூட முடியுமா..?" என்று.

பின் விளைவுகளுக்கு ஆட்படுபவர்கள் பிரச்சினைக்குரியவர்களேயன்றி, ஊடகங்களோ, நீதித்துறையோ, காவல்துறையோ அல்ல... என்பதை மட்டும் ஆழமாக மனதில் இருத்திக்கொள்ளுங்கள்..!!!!

ஒவ்வொரு பிள்ளையும் நாளைய பெற்றோரே..!

நாளை உங்களுடைய குழந்தைகளுக்கும் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கலாம்...!

அதனால் காதலிப்போரே...காதல் வயப்பட்டோரே... எந்த ஒரு செயலையும் பெற்றோருக்கெதிராகச் செய்யகூடாது என்பதில் உறுதியாக இருங்கள்...!!!

## காதல் ஒரு போதை



காதல் ஒரு போதை என்று சில கவிஞர்களும் காதலை எதிர்ப்பவர்களும் கூறியிருக்கின்றனர். ஆனால், இப்போது விஞ்ஞானிகளும் அதையே கூறுகின்றனர். காதலில் விழுவது, 'கொக்கேய்ன்' போதைப் பொருள் ஏற்படுத்துவதற்கு சமனான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என காதல் தொடர்பாக மூளையில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆய்வின்படி, பார்த்தவுடனே காதல் என்பது சாத்தியமாம். மனிதர்கள் தாங்கள் காதல் கொண்டவர்களைக் கண்ணால் காணும்போது மூளையில் 12 இடங்களில் தூண்டல்கள் இடம்பெறுகின்றனவாம்.

இந்நிகழ்வின்போது 'திடீரென சிறப்பாக உணரச்செய்யும்' டோபைன், ஒக்ஸிடோஸின், அட்ரனலின் போன்ற இரசாயனங்களை உடலில் சுரப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 'கொக்கேயின்' போதைப் பொரு ளினாலும் இந்த இரசாயனங்கள் தூண்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆய்வு முடிவுகள் மூலம் காதலுக்கு விஞ்ஞான அடிப்படை உள்ளது என்பது உறுதிப்படுத்துகின்றது. இக்கண்டுபிடிப்புகளின் மூலம் நரம்பியல் விஞ்ஞானத்திலும் உளவியல் மருத்துவத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் கூறப்படுகிறது. சரி, காதலில் விழுவது இதயமா அல்லது மூளையா என்ற பெரிய கேள்விக்கு என்ன பதில்? அது மூளையென்றுதான். ஆனால் இதயத்திற்கும் தொடர்புள்ளது. உதாரணமாக, மூளையின் சில பகுதிகள் செயற்படும் போது இதயத்தில் தூண்டுதல்களை ஏற்பட முடியும் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# "எங்கிருந்த போதும்....."

● பொலிகையூர்
சு.க.சிந்துதாசன்

பாரிசின் உயர்வீதியில் விமான நிலையம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது அந்தக் கார். பின் இருக்கையில் மிகவும் கடினப்பட்டு தன் வலு விழந்த உடலமைப்புக்கேற்ப அமர்ந்தபடி யாரை வரவேற்கச் சென்றுகொண்டிருக்கிறாளோ அவர் குறித்த நினைவுகளை மீட்டிய வண்ணம் சகோதரன் குணாவுக்கு அருகில் அமர்ந்திருந்தாள் தமிழ்நிலா.

பாரிசுக்கு வந்து மூன்று வருடங்களைக் கடந்திருந்த நிலையில் தன் உடல் இயலாமை குறித்த சிரமங்களையும் பாராமல் ஒரு சுமைதாங்கியாய் தமிழ் நிலாவுக்கிருந்த குணாவை எண்ணி நெகிழும் அவளுக்கு இதயனின் வரவு பெரிய எதிர்பார்ப்பைத் தராவிட்டாலும்கூட வரவேற்கச் செல்லவேண்டிய கடமை என்பதால் அவள் காரில் அமர்ந்திருக்கிறாள்.

ஒரு நாள் எந்த முன்னறிவுப்புமின்றி வன்னியில் அமைந்திருந்த தமிழ்நிலாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் இதயன். தமிழ் நிலாவின் முறை மைத்துனனான இதயன் கொழும்பில் ஒரு கம்பனியில் முகாமையாளராகக் கடமை புரிபவன். தமிழ்நிலா சிறு வயதிலிருந்தே தன் சிறிய தாயாரோடு இந்தியாவில் இருந்து வளர்ந்தவள். கல்வியறிவுடையவள். ஆனால் தாய், தந்தையரைப் பார்க்கவென வந்த அவள் நிரந்தரமாகவே வன்னியில் தங்கிவிட்டாள். இதயன் - தமிழ்நிலா இருவருக்குமிடையிலான காதல் இருவரின் திருமணத்துக்கான சம்மதத்தை இரு வீட்டாரிடமும் பெற்றிருந்தது. ஆனாலும் திடீரென கொழும்பிலிருந்து புறப்பட்டு வந்த இதயன் தன் வரவு குறித்து எவருக்குமே தெரியப்படுத்தியிருக்கவில்லை. இதயனைக் கண்டதும் ஆச்சரியத்துக்குள்ளான தமிழ்நிலாவின் அப்பா "என்னையா சொல்லாமற் கொள்ளாமல் வந்திட்டியள்?".

"இல்லை மாமா. அதுக்கெல்லாம் நேரமில்லை. இப்ப உடனை 'றிஜிஸ்ரேசன்' செய்ய வேணும். நாள் நாளைக்குத் திரும்ப வேணும்" உறுதியாகத் தனது வருகைக்கான காரணத்தைக் கூறினான் இதயன்.



எந்த ஆட்சேபனையும் இல்லாத தமிழ்நிலாவின் அப்பா சரியென உடன் பட்டார். சொந்தங்கள், நண்பர்கள் என எவருக்கும் சொல்லாமலேயே வீட்டில் 'றிஜிஸ்ரேசன்' நடந்து முடிந்தது. மறுநாள் இதயன் அனைவரிடமும் விடைபெற்றுக் கொழும்புக்குச் சென்றுவிட்டான்.

ஆசிரியரான தமிழ்நிலாவின் அப்பா, மகளை மருமகனிடம் கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் மகளின் பயணம் சாத்தியப்படாதொன்றாகிவிட்டது. பல்வேறு மாற்று வழிகளைக் கூடக் கையாண்டு பார்த் தார். ஏமாற்றமே கிட்டியது.

இறுதிப் போரின் ஆரம்பம் விரும்பியோ விரும்பாமலோ பலரையும் தன்னுள் சம்பந்தப் படுத்தியது. அந்த நாள்களில்தான் ஒரு இரவு தமிழ்நிலாவின் வீட்டிற் புகுந்த ஆட்சேர்ப்புக்காரர்கள் அவளைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்ல முற்படுகின்றனர். ஆனால் தன்மானம் மிக்க தந்தை வாக்குறுதியளிக்கிறார்.

"இஞ்ச தம்பிமார்! என்ரை பிள்ளையைப் போராட்டத்துக்குப் பிடிச்சுக்கொண்டு போனதாய் இருக்கக்கூடாது. விடியட்டும் நானே கொண்டுவந்து இயக்கத்திலை இணைக்கிறன். என்னை நம்புங்கோ"

"சரி ஐயா உங்களை நாங்கள் நம்பிறம். திரும்பவும் வர வச்சுடாதையுங்கோ"

"இல்லைத் தம்பி"

வந்தவர்கள் விடைபெற்றார்கள். கொடுத்த வாக்குறுதிக்கிணங்க தமிழ்நிலா தந்தையால் இயக்கத்தில் இணைக்கப்பட்டார். ஆனால் இதயனோ தமிழ்நிலா வன்னியில் தந்தையாருடன் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தான்.

கொழும்பில் இருக்கும் அவனுக்குத் தமிழ்நிலாவின் வலி சுமந்த வாழ்வு குறித்தவைகள் தெரிய வாய்ப்பில்லை. தமிழ் நிலாவின் தாய், தந்தையர் சதா அவளைத் தேடிய படியும் தெரிந்த அறிந்த போராளிகளிடம் விசாரித்த படியும் துடியாய்த்துடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் எந்த வழிமுறையில் அவள் போராட்டத்தில் இணைக்கப்பட்டாளோ அதற்கு நேர்மறையாய் ஒரு நேர்மையான விசுவாசமான இதய சுத்தியுள்ள போராளியாய் கொடுத்த கடமைகளை நிறைவேற் றுவதில் குறியாய் இருந்தாள். சில மாதங்களிலேயே அவள் முற்றாய் மாறிவிட்டாள் என்பது ஒரு தடவை விடுப்பில் வீட்டுக்கு வந்து சென்றபோது தெரிந்தது. இதயனுடனான தொடர்பு இனி வேண்டாம் எனும் அளவுக்கு அவள் மனநிலை மாறியிருந்தது.

அவ்வப்போது ஏனையோருக்கு அறிவுரையும் ஆறுதலும் கூறும் தந்தை தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார். போரின் மூர்க்கத் தனம் கூடிய தருணங்களில் இடப்பெயர்வுகளைச் சந்தித்த தமிழ்நிலாவின் குடும்பம் பல்வேறு சொல்லெணாத்துயரங்களைச் சுமந்த படியிருந்தது. தன் குடும்பம் எங்கிருக்கிறது என்பது தெரியாவிட்டாலுங்கூட சண்டை நடக்கும் இட அமைவை அடிப்படையாக வைத்து இப்போது சொந்த இடத்தில் இல்லை என்பதைப் புரிந்துகொண்டாள்.

தொடர் சண்டையின் இறுதி நேரத்தில் அனைவரும் படையினரிடம் சென்று கொண்டிருக்கிறார்கள். தமிழ்நிலாவை விட்டுப் படையினரிடம் செல்ல மனமில்லாத குடும்பமும் குடும்பத்தை சந்திக்க முடியாத நிலையில் தமிழ் நிலாவுமாய் இறுதித் தருண மணிகள் மங்கிக் கொண்டிருந்தன.

குறுகிய நிலப்பரப்புள் ஒரு வக்கிரநிலை உருவாகியிருந்தது. வீதிக் கரையில் ஒரு பெண் போராளி காயத்துடன் கிடப்பதை ஏதேச்சையாகக் கண்ட தமிழ்நிலாவின் தந்தை இது என் மகளாக இருக்குமோ என நினைத்துக் கொண்டு அருகில் சென்றார். அது தன் மகளாக இருந்தபோது அவளது நிலையை விடச் சந்தித்த மகிழ்வு மேலோங்கி யிருந்தது.

ஒருவாறு நலன்புரி முகாமுக்கு வந்த குடும்பம் படுக்கையிலேயே இருந்த தமிழ்நிலாவுடன் மிகவும் சிரமப்பட்டது. இயங்க முடியாத நிலையில் இரு கால்களும் இருந்ததால் தமிழ் நிலாவுக்குத் தன் குடும்பத்தைச் சந்தித்தது கூட ஒரு வித கவலையைத் தந்தது. எனது இந்த நிலையில் என் குடும்பத்தைச் சந்தித்தது போல இதயனையும் சந்தித்துவிடக் கூடாது என் ஆண்டவனிடம் மன்றாடினாள்.

"இனிக் குடும்ப வாழ்க்கை என்பது என்னைப் பொறுத்தவரை கானல்நீர்தான். எனது சுயநலனுக்காக இதயனின் வாழ்க்கை பாழாகி விடக்கூடாது. துன்பம் என்னோடு முடியட்டும். இதுக்கெல்லாம் ஒரு வழி இனி இதயனைச் சந்திக்கவே முடியாத இடத்துக்குச் சென்றுவிட வேண்டும்" என முடிவெடுத்தவள் இதைத் தன் தந்தையாரிடமும் கூறினாள். எது எப்படியோ மகளின் கருத்துக்கு மறுப்புக் காட்டாத தந்தை மகன் குணாவின் உதவியோடு அவளைப் பாரிசுக்கு அனுப்பி வைத்தார்.


வன்னியிலிருந்து வெளியேறி பாரிஸ் செல்லும்வரை இதயனது தொடர்பைத் தவிர்த்திருந்த தமிழ்நிலாவைப் போலவே அவளது குடும்பமும் இதயனது தொடர்பு களின்றி இருந்தது. மீள் குடியமர்வின் பின் கிளிநொச்சி வந்திருந்தது தமிழ்நிலாவின் குடும்பம். ஊர்வந்த தகவலறிந்து மாமனாரை வந்து சந்தித்த இதயன் யாவற்றையும் கேட்டறிந்ததுடன் தமிழ் நிலாவின் தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டான்.

நடக்கமுடியாத ஒரு நிலையில் குணா வின் தயவில் இருந்து கடைசிவரை தன் காலத்தைப் பாரிசிலேயே கழித்துவிட வேண்டும் என இருந்தவளுக்கு இதயனின் வரவு இனம் புரியாத ஒரு மனநிலையைத் தோற்றுத் தது. ஏது செய்வதென்று அறியாதவளாய் அங்குமிங்கும் திரும்பிப் பார்க்கிறாள். கார் விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பாரிய சத்தத்துடன் ஒரு விமானம் அங்கே வந்திறங்குவது அவள் செவிகளுக்குக் கேட்கிறது.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை



தொடர் கதை

13

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

"என்னயோசிக்கிறியள்?"

"இல்ல என்ர பிள்ளையும் இஞ்ச வாறதெண்டு வெளிக்கிட்டால் என்ன நடக்குமெண்டு யோசிச்சுப் பார்த்தன்."

சற்றுநேர மௌனத்திற்குப் பிறகு அந்த ஞாபகம் வந்தது.

"அது சரி எங்க அம்மாவைக் காணேல்ல?"

"என்ன உங்களுக்குத் தெரியாதே? அம்மா அண்ணை கூப்பிட்டு நோர்வேக்கெல்லோ போயிட்டா. உங்களுக்குத் தெரியும் தானே. போன முறை போக வெளிக்கிட்டு சரிவராமல் திரும்பி வந்தவா. இந்தமுறை கொழும்பு போனா. சரி வந்துட்டுது. போய் இப்ப ஒரு மாதம் ஆகுது."

"இப்ப உமக்குச் சரியான கஷ்டமாய் இருக்கும், சின்னாக்களோடை."

"அம்மாவுக்கும் கவலை தான், இவையளும் போகவிடமாட்டம் எண்டு போட்டினம்."

"எங்கை சின்னாக்கள்?"

"பக்கத்து வீட்டுக்கு விளையாடப் போட்டினம்"

"அம்மா என்ன மாதிரி? எப்ப திரும்பி இங்க வாறது?"

"எப்ப எண்டு தெரியாது...."

"அண்ணை எப்பிடியிருக்கிறார்?"

"......."

மௌனம். வாசுகி முகத்தில் சோகம்.

"என்ன...?"

"அண்ணை இப்ப நல்லாக்குடிக்கிறவராம். இவ்வளவு காலமாய் எங்களுக்குத் தெரியாது. அம்மா போன பிறகு தான் தெரியவந்தது. சரியான குடியாம். அதோட 'பவுடர்' பழக்கமுமாம். சீட்டு பிடிக்கிற வேலையும் செய்தவராம். அதிலே ஒருத்தன். ஏமாத்திப் போட்டு போட்டானாம். அதோட தானாம் குடியும் கூடினது...."

வாசுகி மறு படியும் அழுதாள். நான் எப்படி சமாதானபபடுத்துவது?

"சரி அழாதேயும்.... அம்மா போட்டா தானோ.... அவா பார்த்துக் கொள்ளுவா.... நீர் யோசியாதையும்"

"..... ம்.... போனமாதம், அம்மா போக முதல், நல்லாக்குடிச்ச திலை.... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனவையாம். அங்க சொன்னவையாம் இனிக்குடிச்சால்..... உயிருக்கு ஆபத்தெண்டு...."

வாசுகி அழுதாள்.

"சரியம்மா.... வேலையாக்கள் வருகினம்"

நானும் சற்று நேரத்தில் வீடு கிளம்பினேன்.

வீடு- வழமையான அமைதி. ஆலயத்திருவிழாக்கள் மெல்ல களை கட்டத் தொடங்கியிருந்த நேரம். தூரத்தில் ஒலி பெருக்கியில் பாட்டுச் சத்தம் கேட்டது. தெருவில் கும்மாளம் இட்டபடி ஒரு கோஷ்டி போனது. மனசு சீராக வில்லை. வாசுகி கதைத்த விசயங்களை மனுசியிடம் சொல்லி விட்டேன்.

"என்னப்பா இப்ப எங்க பார்த்தாலும் குடிதானே...."

"வெளிநாடெண்டால் சொல்லவே வேணும். குளிருது, குளிருது எண்டு சொல்லிக் கொண்டு குடிக்கவேண்டியது தான். அங்க கேட்கிறதுக்கு ஆர் இருக்கினம்...?"

"அவன் இருபது வயசிலேயே நோர்வேக்குப் போட்டான். போய் இவ்வளவு காலமும் உழைச்சுக் கொண்டு தானே இருக்கிறான். வாசுகி வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற பத்துப்பரப்புக்காணியையும் வாங்கியெல்லே போட்டான். அவன் உழைச்ச காசில தானே வாசுகிக்குக் கலியாணம் செய்து, வீடு கட்டி இப்ப ரவுணிலையும் கடையொண்டு வாங்கினது எண்டு கதைக்கினம்."

மனுசி சொல்வதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"ஏன் அவனுக்குக் கலியாணத்தைச் செய்து வைக்காமல் இருக்கினம்?"

"அதையேன் யோசிக்கினம். அவன் உழைச்சு, உழைச்சுக் குடுத்துக் கொண்டிருந்தால் காணும். காசுப்பிசாசுகள். அவன் கொஞ்சக் காலம் கதையாமல் கொள்ளாமல், கடிதம் போடாமல் இருந்தவனெல்லே"

"பாவம், அவன் குடிக்கிறதுக்கு இதுவும் ஒரு காரணமாப் போய்ச்சு. இஞ்ச கதைக்கினம்! இஞ்ச இருந்து வெளிநாட்டுக்குப் போன ஆட்களில குடியாமல் இருக்கிற ஆட்கள் குறைவாம்."

மனுசி என்னை சந்தேகமாகப் பார்த்தாள்.

(அடுத்தவாரமும் வருவார்கள்)







### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**மனசாட்சியை மதித்து நடக்கும், மேஷ ராசிக்காரர்களே!**

வாழ்வில் எதிர்மறையாக உருவான சிரமங்களை, புதிய அணுகுமுறையால் சரி செய்வீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். இல்லறத்துணையின் கருத்துக்களை, ஆலோசனையாக கருதி செயல்படுவீர்கள். தொழிலில் கூடுதல் கவனம், உழைப்பினால் உற்பத்தி, விற்பனையின் அளவு சீராகும். பணியாளர் கூடுதல் நேரம் பணிபுரிந்து, பணிச்சுமையை குறைத்திடுவர்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**திட்டமிட்ட செயலால், வளர்ச்சி காணும் ரிஷப ராசிக்காரர்களே!**

நீண்ட நாள் எண்ணங்களை, உரிய முயற்சியினால் நிறைவேற்றுவீர்கள். பணவரவில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தேவை, தொந்தரவு அணுகாத சுமூக வாழ்வு முறை அமையும். இல்லறத்துணையின் மனக்கவலை மாற்ற, ஆறுதலாக பேசுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். குடும்பபெண்கள், கணவரின் அன்பு, சீரான பணவசதி கிடைத்து மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**எந்தச் செயலிலும், தனி முத்திரை பதிக்கும், மிதுன ராசிக்காரர்களே!**

குடும்பத்தில் நல்ல நிகழ்வுகளை உருவாக்கும். உறவினர், பெண்களின் விவகாரங்களில் கருத் துச் சொல்லாமல் விலகுவது நல்லது. வாகன பராமரிப்புப் பணி செய்வதால், பயணம் எளிதாக அமையும். புத்திரர் தன் நண்பரிடம் கொள்கிற, மனக்கிலேசம் சரி செய்து, படிப்பில் கவனம் வளர உதவுவீர்கள். உடல் நலத்திற்கு பலம் தருகிற உணவுகளை விரும்பி உண்பீர்கள். இல்லறத்துணை எண்ணங்களை உணர்ந்து, குடும்பச் செலவை மேற்கொள்வது நலம் தரும்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**பிறருக்கு இரக்க மனதுடன் உதவும், கடக ராசிக்காரர்களே!**

ஆரோக்கிய உடல்நலம் அமைந்து பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்த தாராள பணவரவு கிடைத்து துணை நிற்கும். இல்லறத் துணையிடம் உங்கள் மீதான அன்பு, பாசம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டங்களை கூடுதல் கவனத்துடன் பின்பற்றுவீர்கள். குடும்ப பெண்கள், பிள்ளைகளின் நலன் சிறக்க தேவையான பணி மேற்கொள்வர்.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**சாதனை நிகழ்த்துவதில், ஆர்வம் நிறைந்த, சிம்ம ராசிக்காரர்களே!**

புதிதாக தொடங்கும் செயல்களை, கவனமுடன் நிறைவேற்றுவீர்கள். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். உடன் பிறந்தவர்கள், உதவிகரமாக நடந்து கொள்வர். வழக்கு விவகாரத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும். உங்களை அவமானப்படுத்த முயற்சித்தவர், இடம் மாறிப்போகிற சூழ்நிலை உருவாகும். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்வைத்தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள்.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**நற்செயல் புரிந்து, மனதில் மகிழ்ச்சி பெறும், கன்னி ராசிக்காரர்களே!**

முக்கியமான பணிகளை நிறைவேற்றுவதில், தாமதம் உருவாகும். நண்பர்களின் உதவியால், சிரமங்களை ஓரளவு குறைத்துக் கொள்வீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்ற வேண்டும். புத்திரரின் உடல் நலத்திற்கு, சிறு அளவிலான சிகிச்சை தேவைப்படும். சிலருக்குச் சொத்தின் பேரில், பணக்கடன் பெறுகிற நிலைமை உருவாகலாம். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து, உங்களின் மனக்கவலையை மாற்றுவார். பணச்செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பதால் சிரமம் தவிர்க்கலாம்.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**சிரமமான பணியை எளிதாக்கும் நுணுக்கம் அறிந்த துலாம் ராசிக்காரர்களே!**

வாழ்வில் கூடுதல் நன்மை பெற, பின்பற்ற வேண்டியவை பற்றிய, புதிய விஷய ஞானம் மனதில் பிறக்கும். வீடு, வாகனத்தில் அளவான பயன்பாட்டு வசதி கிடைக்கும். புத்திரரின் தேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். எதிரியால் தொந்தரவு அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். இல்லறத்துணை, உங்களின் பரிமளிப்பு திறன் வளர உதவுவார். தொழிலில், சில மாற்று உபாயம் பின்பற்றி, பணவரவில் முன்னேற்றம் காண்பீர்கள்.




### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**உழைப்பு என்ற சொல்லை தாரக மந்திரமாகக் கொண்ட, விருச்சிக ராசிக்காரர்களே!**

உடல்நல ஆரோக்கியம் பெற்று பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். பெரிய மனிதர்களின் உதவி எதிர்பாராத வகையில் கிடைக்கும். இதனால், சில நன்மையும், சமூகத்தில் உயர் மதிப்பும் பெறுவீர்கள். பூர்வ சொத்தில் பெறுகிற பணவரவு கூடும். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை, உங்களின் கருத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் தருவார். தொழிலில் சராசரி உற்பத்தி, விற்பனையை பெற கூடுதல் உழைப்பு கவனம் மட்டுமே உதவும்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**நல்ல சிந்தனைகளை வளர்த்திடும் தனுசு ராசிக்காரர்களே!**

உங்களின் சிறிய முயற்சியும் அதிக அளவிலான நன்மைகளை பெற்றுத் தரும். வெகுநாள் எதிர்பார்த்த கணிசமான தொகை கிடைப்பதற்கான அனுகூலம் உண்டு. உடன்பிறந்தவர்கள் கூடுதல் அன்பு பாசத்துடன் நடந்து கொள்வர். புதிதாக வீடு, வாகனம் வாங்க சிலருக்கு யோகம் உண்டு. ஆரோக்கிய உணவு வகைகளை சாப்பிட்டு உடல்நலம் பேணுவீர்கள். இல்லறத்துணையின் ஆலோசனை மனதில் புதிய மாற்றம் தரும்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**நண்பர், உறவினரை நல்லமுறையில் உபசரிக்கும் மகர ராசிக்காரர்களே!**

தொடங்கும் செயல் இனிதே நிறைவேற கூடுதல் முயற்சி உதவும். பொறாமை குணம் உள்ளவரின் ஏளன பேச்சுக்காக மனம் வருந்த வேண்டாம். பணச்செலவில் சிக்கனம் பின்பற்றி சிரமம் தவிர்த்திடுங்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து பணப்பரிவர்த்தனை சீராகும். உத்தியோகஸ்தர்களுக்கு மிதமான சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள், விளையாட்டு பயிற்சிகளில், பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்றவும்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**வெளிப்படையாக பேசுகின்ற குணம் கொண்ட கும்ப ராசிக்காரர்களே!**

பேச்சில் வசீகரமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். குடும்ப செலவுக்கான பணவசதி திருப்திகர அளவில் இருக்கும். உடன்பிறந்தவர்களின் உதவி எதிர்பார்த்தபடி கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றி மகிழ்வீர்கள். வீடு, வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். எதிரியால் வரும் தொந்தரவு சமயோசித நடவடிக்கையால் சரியாகும். இல்லறத்துணையின் மனதில் நம்பகக்குறைவு வராமல் நடந்து கொள்வது நல்லது.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**விசுவாச குணத்துடன் நடந்து நற்பெயர் பெறும் மீன ராசிக்காரர்களே!**

உங்களின் சுய கௌரவத்தை பாதுகாக்கிற வகையில், எந்த செயலிலும் முன்யோசனையுடன் ஈடுபடுவீர்கள். அனுகூல சூழ்நிலைகள் அமைந்து மனதிற்கு ஊக்கம் தரும். உடன்பிறந்தவர் வகையிலான மங்கலப் பேச்சு வார்த்தை சுமுகமாக நிறைவேறும். பூர்வ சொத்தில் பெறுகிற பணவரவு அதிகரிக்கும். வாழ்வில் எதிர்மறையாக தெரிந்த விஷயங்கள் அனுகூலம் தருவதாக மாறும். இல்லறத்துணை குடும்பநலன் சிறக்க தேவையான வழிவகை காண்பார். தொழிலில் உருவாகிற புதிய நன்மையை அக்கறையுடன் பாதுகாத்திடுவீர்கள். பெண்கள் கணவரின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரு

# டெஸ்ட் போட்டிகளுக்கு குட்பை



விளையாட்டு வீரரொருவர்,அவரது பெறுபேறுகள் உச்சத்தில் இருக்கும் போதே ஓய்வுபெறுவது சிறந்தது. அந்தவகையில், டெஸ்ட் போட்டிகளிலிருந்து தான் தனது ஓய்வை அறிவித்த இலங்கை கிரிக்கெட் அணியின் சகல துறைவீரரும், முன்னாள் தலைவருமான திலகரட்ண டில்ஷானின் முடிவு வரவேற்கத்தக்கது. அவர் இனி ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளிலும், 20-20போட்டிகளிலும் மாத்திரமே கலந்துகொள்வார்.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களில் அர்ஜுனா, அரவிந்த,அத்தப்பத்து,சனத் உள்ளிட்ட பல முன்னணி வீரர்களின் ஓய்வுகள் முறைப்படி அமைந்திருக்க வில்லை. அரசியல் காரணங்களுக்காக அவர்கள் ஒதுக்கப்பட்டபோது, அல்லது ஃபோர்ம் இன்றி தவித்தபோதே அவர்கள் தங்களாக ஓய்வுகளை அறிவித்துக் கொண்டார்கள். முரளி மட்டுமே உச்சத்திலிருந்த போது உரிய மரியாதையுடன் கௌரவமாக வழியனுப்பி வைக்கப்பட்டார். இன்று டில்ஷானை வழியனுப்பி வைக்க சந்தர்ப்பம் கிடைக்காத போதும் அவர் கௌரவமாக வெளியேறுவதே பெரிய விடயம்.

சிம்பாப்வேயில் ஆரம்பித்த தனது டெஸ்ட் வாழ்வை அங்கேயே வைத்து முடித்துக் கொள்ள விரும்பியிருந்த டில்ஷான், அத்தொடர் இடம் பெறாததன் காரணமாகவே டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் முடிவை தற்போது எடுத்ததாக குறிப்பிட்டார். இலங்கை அணி அடுத்ததாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும், பங்களாதேஷிற்கும் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், புதிதாக வரும் இளம் வீரர் அந்த இரண்டு தொடர்களிலும் விளையாடி அனுபவத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், கடுமையான தொடரான இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரில் பங்குபற்றுவதை உறுதி செய்வதற்காகத் தனது ஓய்வு முடிவை அறிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

1999 ஆம் ஆண்டு சிம்பாப்வேயில் வைத்து தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட டில்ஷான், முதல் போட்டியில் பிரகாசிக்காது விட்டாலும் அத்தொடரில் சதம் ஒன்றைப் பெற்றார். இடையிடையே அவரது துடுப்பாட்ட ஃபோர்ம் கேள்விக் குள்ளான சந்தாப்பத்தில் எல்லாம் தனது சகல துறை பெறுபேறுகளை வெளிப்படுத்தி இலங்கையணியில் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டார். தற்போதுள்ள களத்தடுப்பாளர்களில் முதன்மையானவராகத் திகழும் இவர், பெரும்பாலும் ஓவ் திசையில் களத்தடுப்பில் ஈடுபடுவதுடன், பல அபார பிடிகளையும் எடுத்து அசத்தியுள்ளார்.

ஆரம்பத்தில் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரராக விளையாடிய டில்ஷான், 2009 ஆம் ஆண்டு முதல் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கினார். இந்த முடிவு தனது டெஸ்ட் வாழ்வில் மிகமுக்கியமானதாக அமைந்திருந்ததாகவும் அவர் ஓய்வின் போது குறிப்பிட்டிருந்தார். டெஸ்ட் போட்டிகளிலும் அடித்தாடும் டில்ஷானின் நிகர் ஓட்ட விகிதம் கடந்த 2009 முதல் இன்றுவரை 72.79 என்று அதியுச்சமாக இருக்கின்றது.

இலங்கை அணிசார்பாக 87 டெஸ்ட் போட்டிகளில் இதுவரை விளையாடியுள்ள டில்ஷான், அவற்றில் 11 டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணியின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.87 டெஸ்ட் போட்டிகளில் அவர் 5492 ஓட்டங்களை 40.98 என்ற சராசரியில் பெற்றிருக்கின்றார். இவற்றில் 16 சதங்களும், 23 அரைச்சதங்களும் உள்ளடங்குகின்றன. அத்தோடு, அவர் 39 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். சனத்தின் ஓய்வுக்குபிறகு, எதிரணியை அச்சுறுத்திய ஒரே வீரர் டில்ஷான் என்றால் மிகையில்லை. ஆனால், அவரது பெறுபேறுகள் சீராக இல்லாததே அவர் உச்சம் தொடமுடியாது போனதற்கான காரணம்.

# அடுத்த பயிற்றுவிப்பாளர் யார்?

சர்வதேச கிரிக்கெட் அணிகளின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவர்களை நியமிப்பதைவிட பிரபலமானவர்களை நியமிப்பது என்பது எழுதப்படாத விதி. இதை அந்த அணியின் கௌரவமாகவும் சிலவேளைகளில் பார்ப்பதுண்டு. கிரிக்கெட்டில் அசத்தும் தென்னாசிய நாடுகள் கூட தங்கள் நாட்டு முன்னாள் வீரர்களைத் தமது அணிக்குப் பயிற்றுவிப்பாளர்களை நியமிக்காமல் வெள்ளையர்களை நியமித்து அழகு பார்க்கிறது. இந்தியாவுக்கு 'டங்கன் ப்ளட்சா', பாகிஸ்தானுக்கு 'டேவ் வட்மோர்', இலங்கைக்கு 'கிரஹம் ஃபோட்' என அனைவரும் வெளிநாட்டவாகள்.

தற்போது இலங்கைகிரிக்கெட் அணிக்குத் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக 'மாவன் அத்தப்பத்து'வும், வேகப்பந்து பயிற்றுவிப்பாளராக 'சமிந்தவாசும், சுழல்பந்து பயிற்றுவிப்பாளராக முரளிதரனும் (பகுதிநேரம்) கடமையாற்றுகின்றார்கள். ஆனால், தலைமைப் பயிற்றுவிப்பாளராகத் தென்னாபிரிக்காவின் 'கிரஹம் ஃபோர்ட்' நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தென்னாபிரிக்கா சார்பாக முதல்தரப் போட்டிகளில் மட்டுமேவிளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'கிரஹம் ஃபோரட்' தனது 2 வருட ஒப்பந்தத்தை நீட்டிக் கொள்ளவிரும்பாது, எதிர்வரும் ஜனவரியோடு இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்திருக்கின்றார். எனவே, புதிய பயிற்றுவிப்பாளர்களுக்கான விண்ணப்பங்களை இலங்கைக் கிரிக்கெட் சபை கோரியிருந்தது. முடிவுத் திகதி வரை ஆறு விண்ணப்பங்கள் கிடைத்ததாகத் தெரிவித்த ஸ்ரீலங்கா, கிரிக்கெட் முடிவுத் திகதிக்குப் பின்னரும் விண்ணப்பங்கள் கிடைப்பதாகவும் இது வரை 11 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றது.

இரகசியம் பேணல் காரணமாக அவர்களின் விபரங்களை வெளிப்படுத்தவிரும்பவில்லை என இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி 'ஆஷ்லி டீ சில்வா' தெரிவித்துள்ளார். எனினும், வெளியாகியுள்ள தகவல்களின் அடிப் படையில் இலங்கை அணியின் முன்னாள் உப பயிற்றுவிப்பாளரும், 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் வைத்து இலங்கை அணி தீவிரவாதத் தாக்குதலுக்கு உள்ளான வேளை காயமடைந்தவரான 'போல் ஃபபிரேஸ்' இந்தப் பதவிக்கு விண்ணப்பித்துள்ளத்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் தவிர, இலங்கை அணியின் முன்னாள் பயிற்றுநர் 'ஷேன் டஃப்', இலங்கையின் தற்போதைய களத்தடுப்புப் பயிற்றுவிப் பாளர் 'றுவான் கல்பகே' ஆகியோரும் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்கிலாந்தின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் 'பீற்றர் மூரஸ்', சென்னை 'சுப்பர் கிங்ஸ்' அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான 'ஸ்டீஃபன் ஃபிளமிங்' ஆகியோரை இப் பதவிக்காக ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணுகியிருந்ததாகத் தகவல்கள் வெளியாகிய போதிலும், அவர்கள் அப்பதவிக்கு விண்ணப்பித்தார்களா என்பது குறித்துத் தகவல்கள் வெளியாகவில்லை.

Sri Lanka Cricket



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜியா கான் கொலையா?

பொலிவூட் நடிகை ஜியா கான் தற்கொலை செய்து கொள்ளவில்லை மாறாக அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று அவரது தாய் ராபயா அமின் தெரிவித்துள்ளார். பொலிவூட் நடிகை ஜியா கான் கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி மும்பையில் உள்ள தனது வீட்டில் துப்பட்டாவால் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரை தற்கொலைக்குத் தூண்டிய அவரது காதலன் சூரஜ் பஞ்சோலி கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் பெல்ட்டால் கழுத்து நெரிக்கப்பட்டு ஜியா கான் மரணம் அடைந்துள்ளதாக தடயவியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையே ஜியா கான் இறந்த பின் எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை அவரது தாய் ராபயா வெளியிட்டுள்ளார். நடிகை ஜியா கானின் கழுத்து பெல்ட்டால் நெறிக்கப்பட்டதற்கான ஆதாரம் அவரது உடலில் இருந்ததாக தடயவியல் அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.

# த்ரிஷாவுக்குப் புற்றுநோயா?



நடிகை த்ரிஷா மார்பகப்புற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் திடீரெனப் பரவியதால் தமிழ் சினிமா வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒருகாலத்தில் தமிழின் முன்னணி நாயகியாக வலம் வந்தவர் த்ரிஷா. நீண்டகாலமாக தனிக்காட்டுராணியாக இருந்த இவரின் நிலை புதிய நடிகைகளின் வரவால் ஆட்டங்கண்டு, இப்போது கைவசம் சொல்லிக்கொள்ளும் படியான படங்கள் இன்றித் தவித்து வருகிறார். இந்தநிலையி[ல்] தெலுங்கு நடிகர் ராணாவை விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்று ஊகங்கள் வெளிவந்திருந்தன.

இப்படியான சூழலில் தான் த்ரிஷா மார்பகப்புற்று நோயால் அவதிப்படுகிறார் என்றும், அவர் சில வருடங்களுக்கு முன்னர் மார்பில் பச்சை குத்திக்கொண்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகச் செய்தி பரவியது.

புற்றுநோய் வந்திருப்பதை அறிந்த கவலையிலேயே நான்கு நாள்களுக்கு முன்னர் குடிபோதையில் மூழ்கி, பொலிஸாரிடமும் சிக்கியிருந்தார் என்றும் கூறப்பட்டது.

ஆயினும் இவையெல்லாம் த்ரிஷாவின் மதிப்பைக் குறைப்பதற் செய்யப்பட்ட திட்டமிட்ட கட்டுக்கதைகள். அவர் மிகவும் நல உள்ளார் என்று த்ரிஷாவின் தாயார் உமா தெரிவித்துள்ளார்.



# ஜெய்க்குப் பாராட்டு

'ராஜா ராணி' படத்தைப் பார்த்த நயன்தாரா, அதில் நடித்த நாயகர்களில் ஒருவரான ஜெய்யைப் பாராட்டித் தள்ளி விட்டாராம். உன்னோட போர்ஷன்தான் சூப்பரா வந்திருக்கு. பெரிய்ய ஆளா வருவே என்று மனம் விட்டுப் பாராட்டினாராம் நயன்தாரா. நயன்தாராவின் பேச்சையும், பாராட்டையும் ஜெய்க்கு அப்படியே... சந்தோஷமாகி விட்டதாம். இந்தப் படத்தில் நயன்தாராவும், ஆர்யாவும் தான் முதன்மையான ஜோடி என்றாலும் ஜெய்தான் அத்தனை பேரையும் தூக்கி சாப்பிட்டிருக்கிறார் நடிப்பில் என்பது பலரது பாராட்டாக உள்ளது. அதை நிரூபிப்பது போல நயன்தாராவே ஜெய்யைப் பாராட்டியுள்ளாராம்.

# தயாராகும் சித்தார்த் - சமந்தா

சித்தார்த்தும் சமந்தாவும் திருமணத்துக்குத் தயாராகிறார்கள். இதற்காகப் புதுப்படங்களில் நடிப்பதை சமந்தா நிறுத்தியுள்ளார். சமந்தா தமிழில் 'பாணா காத்தாடி', 'நான் ஈ', 'நீ தானே என் பொன் வசந்தம்' படங்களில் நடித்துள்ளார். தெலுங்கிலும் முன்னணி நடிகையாக உள்ளார். சித்தார்த்தும், சமந்தாவும் தெலுங்கில் 'ஜாபர்தஸ்த்' என்ற படத்தில் ஜோடியாக நடித்தனர். அப்போது நெருக்கம் ஏற்பட்டு காதல் வயப்பட்டனர். இருவரும் கோவில்களுக்கு குடும்பத்தினருடன் சென்று பூஜை, பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டார்கள். விரைவில் திருமணம் செய்து கொள்ள இருக்கிறார்கள்.

இளம் நடிகர்கள் உடன் ஜோடியாக நடிக்க வேண்டாம் என்று சமந்தாவுக்கு சித்தார்த் தடை போட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே தற்போது ஒப்பந்தமாகியுள்ள விஜய், சூர்யா படங்களை முடித்துவிட்டு நடிப்புக்கு முழுக்குப் போட சமந்தா முடிவு செய்துள்ளார். அனுஷ்கா நடித்த அருந்ததி தற்போது அவர் நடித்துக் கொண்டிருக்கும் ருத்ரமாதேவி படங்களை போல் கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வேடங்களில் மட்டும் நடிக்க முடிவு செய்துள்ளாராம்.




சுடர் ஒளி / 16, ஒக்ரோபர் - 22 ஒக்ரோபர் 2
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம
லயில்
து
ன.
ால்

பபதற்காக
் நலமாகவே
ார்.



# பேய்க்குப் பயந்த ஹன்சிகா

சுந்தர்.சி இயக்கிய 'தீயா வேலை செய்யணும் குமாரு' படத்தில் நடித்த ஹன்சிகா மீண்டும் அவர் இயக்கும் 'அரண்மனை' படத்தில் நடிக்கிறார். ஏற்கனவே ஒப்புக்கொண்ட படப்பிடிப்பில் ஹன்சிகா தீவிரமாக நடித்துக்கொண்டிருந்ததால் இப்படத்தில் நடிக்க தாமதம் ஆனது. இதனால் பட குழுவுடன் லட்சுமிராய், ஆண்ட்ரியா உள்ளிட்டோர் காத்திருந்தனர். அண்மையில்தான் ஹன்சிகா படப்பிடிப்பில் கலந்துகொண்டார். திகில் படமாக உருவாகும் இதில் நடித்தபோது ஹன்சிகா பயத்தில் நடுங்கினாராம். ''இதற்குமுன் நான் ஏற்று நடித்த வேடங்களுக்காக இதுபோல் நடுங்கியது கிடையாது. முதன்முறையாக எனக்குப் பயம் தொற்றிக்கொண்டது. 'அரண்மனை' படப்பிடிப்பில் பங்கேற்றது பற்றிதான் சொல்கிறேன். இந்த படமே எனக்கு சவாலானது. இதுவரை இப்படியொரு கதாபாத்திரத்தில் நடித்ததில்லை'' என்றார்.
படத்தில் அவர் பேயாக நடிப்பதாகத் தகவல். தான் நடித்த காட்சிகளை திரையில் பார்த்துதான் அவர் பயந்தாராம்.

# விரைவில் கல்யாணம்

விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதால் 'கமல்' படத்தில் நடிக்க வந்த வாய்ப்பையும் மறுத்துவிட்டாராம் அனுஷ்கா.
கிட்டத்தட்ட கடந்த எட்டு ஆண்டுகளாக தெலுங்கு, தமிழில் நடித்து வருகிறார் அனுஷ்கா. தமிழில் முதலில் அறிமுகமானது ரெண்டு படத்தில். ஆனால், அந்தப் படம் சரியாகப் போகாததால் மீண்டும் தெலுங்கிலேயே கவனம் செலுத்தி வந்த அனுஷ்காவுக்கு, மீண்டும் தமிழ்ப் பட வாய்ப்புகளைத் தந்தது அருந்ததி மொழிமாற்றப் படம். விஜய், சூர்யா, விக்ரம், ஆர்யா என முன்னணி ஹீரோக்களின் விருப்ப நாயகியாக மாறி கலக்க ஆரம்பித்த அனுஷ்கா தற்போது தெலுங்கில் 'ருத்ரம்மா தேவி', 'பாகுபாலி' என இரண்டு மிகப்பெரிய படங்களில் நடித்து வருகிறார். இந்தப் படங்கள் வெளியாகும் போதே திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளாராம். வயதும் 31 ஆகிவிட்டதால், இதற்கு மேல் திருமணத்தைத் தள்ளிப்போடுவது சரியல்ல என்ற அறிவுரைகளும் இதற்கு முக்கிய காரணமாம். இந்த நேரம் பார்த்துத்தான் கமலின் தமிழ் - தெலுங்குப் படமான உத்தம வில்லனில் நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறது. ஆனால் இதில் நடிக்க ஆரம்பித்தால், முடியும்போது 33 வயதாகி விடும் என்பதால், 'மன்னிக்கவும்' என்று நாசூக்காக சொல்லி ஒதுங்கிக் கொண்டாராம் இந்த யோகா ஆசிரியை!

# ...சிகர்களின் விலைமாது!



...ழில் 'கனகவேல் ...க்க', '...ண்' ...ள்ளிட்ட சில ...டங்களில் ...டித்தவர் ...ரிப்பிரியா. ...ன்னடத்து ...டிகையான ...வர் அட்ட ...தி ரஞ்சித் ...டன் ஒரு படத் ...ல் நடித்துக் ...காண்டிருக் ...றார். தனது ...தன்னிந்திய ...பிமான ஹீரோக் ...ள் பலரையும் ...ழைத்து அப்படத்தை ...ஷா போட்டுக்காட்டினாராம். ...தைப் ...த்த அவர்கள்,ஹரிப்ரியாவினால் ...ப்படிகூட நடிக்க முடியுமா என்று ஆச்சர் ...த்தில் வாயைப் பிளந்தார்களாம். அப்படி ...ன்னதான் பெருசாக நடித்து விட்டார் ...றரிப்ரியா என்கிறீர்களா? அந்த படத்தில் ...வருக்கு விலை மாது வேடமாம். இதுவரை ...த்தனையோ நடிகைகள் விலைமாதுவாக ...டித்திருந்தபோதும், படுக்கையறை காட்சி ...ளில் பட்டும் படாமலும்தான் நடித்திருப் ...ார்கள். ஆனால் ஹரிப்ரியாவோ, எந்தவித ...யக்கமும் இன்றி அரை நிர்வாண காட்சி ...ளில் ஆண்களுடன் இணைந்து நடித்துள்ளாராம். ஆடை மூடிய ரோஜாவாக பார்த்து வந்த ஹீரோக்கள் இந்த அலங்கோலமான காட்சிகளைப்பார்த்துதான் இவரா இப்படி? என்று வாயை பிளந்து நின்றார்களாம்.

# ரஜனியின் கவலை

இன்று மளமளவென சொந்தப்படம் எடுக்கக் கிளம்பி விடுகிறார்கள் நடிகர்கள். 'இளங்கன்று பயமறியாது' என்பதைப் போல களத்தில் குதிக்கும் இவர்களுக்கு இது எவ்வளவு பெரிய ஆபத்து என்பது போகப் போகத்தான் புரியும்.
சினிமாவில் வீடு வாசலை இழந்து நிற்கும் பலரும் தங்களுக்குள் புலம்பி வரும் விடயம் இது. சமீபத்தில் விஷால் 'மதகஜராஜாவை' வெளியிடப் போவதாக களமிறங்கி, அந்த மன உளைச்சலில் மருத்துவமனையில் சேர்க்கிற அளவுக்கு ஆளானார். விஜய் சேதுபதி 'சங்கு தேவன்' என்ற படத்தை தயாரிக்க ஆரம்பித்து, சில நாட்களிலேயே 'ஆளை விடுங்கப்பா' என்று ஓடிப் போனார். அப்புறம் எப்படியோ இவரைச் சமாதானப்படுத்தி மீண்டும் தயாரிப்பு வேலையை தொடர வைத்திருக்கிறார்கள்.



இவர்களில் தனுஷ் எப்படி? 'எதிர்நீச்சல்' என்கிற இவரது முதல் தயாரிப்பே தாறுமாறான வெற்றிபெற்றது. இதற்குப் பிறகு இன்னும் சந்தோஷமாக இந்தப் பணியை செய்ய இறங்கிவிட்டார் இவர். ஆனால், சினிமாவில் கரை கண்ட இவரது மாமனாரான சூப்பர் ஸ்டார் ரஜினிக்குதான் தனுஷின் புலிவேக பாய்ச்சல் கவலையளிக்கிறதாம். அவரை அழைத்து சற்று நிதானமாக நடை போடும்படி கூறியிருப்பதாகத் தகவல் பரவிக்கிடக்கிறது.



# நயனின் முடிவு

சிம்பு, பிரபுதேவா ஆகிய இருவரையும் வெறித்தனமாக காதலித்த நயன் தாரா, பின்னர் அந்தக் காதல்கள் தோல்வி அடைந்தபின், மிகவும் கலங்கினார். தற்போது மீண்டும் மூன்றாவது முறையாக காதலில் தோல்வி அடைந்துள்ளதால் இனி என் வாழ்வில் காதலே இல்லை. நான் விரைவில் கன்னியாஸ்திரியா மாறப்போகிறேன் எனத் தனக்கு நெருங்கிய தோழி களிடம் கூறியுள்ளார். இதனால் தென்னிந்திய படவுலகம் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. 'ராஜா ராணி' படப்பிடிப்பில் ஆர்யாவுடன் நெருங்கிப் பழகினார் நயன்தாரா. ஆனால் அதன்பின் ஆர்யாவும் அனுஷ்காவும் நெருங்கிய நண்பர்கள் ஆனதால் நயன்தாரா நொறுங்கிப்போனாராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவலியா.... கவலையை விடுங்கள்..!



'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்று முதுமொழி ஒன்று எம்மிடையே காணப்படுகின்றது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை இன்று தலையிடியின் தாக்கத்தினை உணர்வதாகக் கூறிக்கொண்டாலும் வீட்டுவேலைகளையும் கவனித்து ஏனைய வேலைகளையும் கவனித்துக்கொள்கின்ற பெண்கள் தலையிடியை நித்திய கருமம் போல உணர்கிறார்கள். எப்போதும் தலையிடி என்று சொல்லிக்கொள்கின்ற அத்தகையவர்களிற்கு அதனை குறைத்துக் கொள்ள சில இயற்கைத்தன்மையான விடயங்கள்...

★ வெற்றிலைச் சாறு எடுத்து அந்தச் சாற்றில் கராம்பை அரைத்து எடுத்து இரண்டு பொட்டுப் பகுதிகளிலும் கனமாகப் பூசி வந்தால் தலைவலி குறையும்

★ செண்பக இலையை எடுத்து சுத்தம் செய்து அதன் மீது நெய்யைத் தடவவேண்டும். பின்பு ஓமத்தைப் பொடி செய்து அந்தப் பொடியை இலையின் மேல் தூவ வேண்டும். இந்த இலையைத் தலையில் வைத்து கட்டி வந்தால் வெப்பத்தினால் ஏற்படும் தலைவலி குறைந்து உடல் குளிர்ச்சி ஏற்படும்.

★ வேப்பம் பட்டை, கடுக்காய், கோரைக் கிழங்கு, நிலவேம்பு ஆகியவற்றைச் சமஅளவு எடுத்து தண்ணீர் விட்டு பாதியளவு வரும் வரை சுண்டக்காய்ச்சி அதனுடன் தேன் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் தலைவலி குறையும்

★ மகிழம்பூ, சுக்கு, சீரகம், சோம்பு, ரோஜாப்பூ, ஏலக்காய், அதிமதுரம், சித்தரத்தை ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து இடித்துப் பொடி செய்து கொள்ளவேண்டும். அந்தப் பொடியைக் காலை, மாலை என இருவேளை அரைத் தேக்கரண்டி அளவு எடுத்து தேனில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் தலைவலி குறையும்

★ கற்பூரவல்லி இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை ஆகியவற்றை கலந்து நன்கு கலக்கி நெற்றியில் பற்றுப் போட்டு வந்தால் தலைவலி குறையும்.

## புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

# "நான் மலாலா"

பாகிஸ்தானில் பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காக பிரசாரம் செய்த மலாலா என்ற 15 வயது மாணவியைத் தலிபான்கள் சுட்டனர். இதில் பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடிய அவருக்கு இங்கிலாந்து அரசு இலவச சிகிச்சை அளித்தது.

தற்போது பூரண குணமடைந்துள்ள அவர் இங்கிலாந்து பர்மிங்காமில் உள்ள 'எட்க்பாஸ்டன்' என்ற பள்ளியில் சேர்ந்து படித்து வருகிறார்.

பல்வேறு சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ள மலாலாவின் பெயர் உலகின் உயரிய பரிசாகக் கருதப்படும். அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில் மலாலாவின் பெயரும் இறுதிப் பட்டியலில் இடம் பெற்றிருந்தபோதும், இறுதியில் அவளுக்கு அது கிடைக்கவில்லை.

இந்நிலையில், தலிபான்களிடம் சிக்கி அனுபவித்த வேதனைகளை **''நான் மலாலா''** என்ற பெயரில் புத்தகமாக வெளியிட மலாலா விரும்பினார். இதற்கான உரிமையைப் பெற இங்கிலாந்தைச் சேர்ந்த ''வெயிடென்பெல்ட் அண்ட் நிகோல்சன்'' பதிப்பகம் மலாலாவிடம் 15 கோடி ரூபாய்க்குக் கடந்த மார்ச் மாதம் ஒப்பந்தம் செய்தது.

இங்கிலாந்து நூலாசிரியர் கிரிஸ்டினா லாம்ப் எழுதியுள்ள ''நான் மலாலா'' என்ற 276 பக்க புத்தகம் உலக நாடுகளில் 09-10-2013 விற்பனைக்கு வந்தது. பாகிஸ்தானில் கூட இந்த புத்தகம் 595 ரூபாவுக்கு விற்பனை செய் யப்பட்டது குறிப்பிடத் தக்கது.





# அளவுக்கு மிஞ்சினால்

இரவு வேளைகளில் தூங்குவது உடலுக்கு அளிக்கும் ஓய்வு. நாள்தோறும் வேலை செய்வதனால் களைத்த உடலுக்கும் மனதுக்கும் இரவுநேரத்தில் 7 மணிநேரம் வரை ஓய்வளித்தால் தான் மறுநாள் சுறுசுறுப்பாக பணியைத் தொடங்கமுடியும்.

ஆனால் அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே. அதுபோலத்தான் நித்திரையும். அதிகநேரம் தூங்குவது ஆபத்தானது என்று ஆய்வுமுடிவு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இரவுநேரத்தில் ஒன்பது மணிநேரத்திற்கு மேல் தூங்கும் நடுத்தர மற்றும் வயதான பெண்களுக்கு, இதயநோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக தெரிவிக்கின்றது அந்தஆய்வு. நடுத்தர வயதுப்பெண்களின் தூக்கத்திற்கும், இதயகோளாறுகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர் மருத்துவ ஆய்வாளர்கள்.

50 முதல் 79 வயது வரையிலான மொத்தம் 93,175 பெண்கள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். ஏழரை ஆண்டுகாலம் பெண்களின் தூக்கநேரம் கண்காணிக்கப்பட்டது. இந்தப் பெண்களில் 1,166 பேருக்கு மிகவும் பொதுவான வகையைச் சேர்ந்த இதயக்கோளாறான இஸ்கெமிக்ஸ்ட் ரோக்கை அனுபவித்திருப்பது ஆய்வில் தெரியவந்தது. ஆய்வின் முடிவில் சராசரியாக 7 மணிநேரம் தூங்குவோருடன் ஒப்பிடுகையில், 8 மணிநேரம் மற்றும் 9 அல்லது அதற்கும் மேற்பட்ட மணிநேரம் தூங்குவோர் முறையே 14 சதவீதம், 24 சதவீதம் மற்றும் 70 சதவீதம் அளவில் இதயக்கோளாறு வருவதற்கான அபாயம் உண்டு என்பது கண்டறியப்பட்டது.

எனவே, பெண்கள் 9 மற்றும் அதற்கும் அதிகமான மணிநேரங்கள் தூக்கத்தைத் தவிர்த்து, சராசரியாக 7 மணிநேரம் தூங்குவதே சிறந்தது என்று மருத்துவ ஆய்வாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம்

■ ஜெகன்



# கடலில் மூழ்கிய விமானம்

அலிடாலியா- டி.சி. 9 விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த அனைவருமே மிக மகிழ்ச்சியுடன் அளவளாவிக் கொண்டிருந்தனர். நத்தார்ப் பண்டிகைக்காக தத்தம் இல்லங்களுக்குச் செல்லும் உற்சாகம் எல்லோர் முகங்களிலும் சிலர் நத்தார்ப் பாடலைப் பாடினர்.

விமானம் தரையிறங்கப் போவதற்கான சமிக்ஞை விளக்குகள் கண் கூசும் வண்ணம் விமானத்தினுள் ஒளிர்ந்தன. கடல் பக்கமாக விமானம் சிசிலி விமானத்தளத்தில் இறங்குவதற்குத் தயாராகத் தாழப்பறந்தது.

சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தவர்கள் அவற்றை அணைத்தார்கள். பாதுகாப்புக்காக அணியும் இருக்கைகளுடன் பிணைக்கப்பட்டிருந்த பட்டிகளைப் பொருத்திக் கொண்டார்கள். முப்பது விநாடிகளில் விமானம் கீழே இறங்கியது.

ஆனால் அன்று விடுமுறைநாள். கீழ் நோக்கி இறங்கிய விமானம் தரையைத் தொடவே இல்லை. பலமாக வீசிய காற்று விமானத்தை மோதித் தள்ளிற்று. விமானம் தள்ளாடியது.

ரோம்- பலரிமோ- கடானியோ மார்க்கமாகச் செல்லும் அந்த விமானம் மது அருந்திய திமிங்கிலம் போல் தள்ளாடிக் கடலில் விழுந்து ஒரு நிமிடத்திற்குள் மூழ்கி விட்டது. அனுபவசாலியான விமானவோட்டி 46 வயதான ஜிம் நள்ளிரவுக்குப் பத்து நிமிடங்கள் இருக்கும் போதே ரோமோபுரி விமானத்தளத்திலிருந்து அந்த விமானத்தைக் கிளப்பினார்.

அன்று மார்கழி மாதம் 22 ஆம் திகதி. அன்றைய தினம் விமானத்தில் 146 பயணிகளில் பெரும்பாலானவர்கள் சிசிலியைச் சேர்ந்தவர்கள். நத்தார், புத்தாண்டுக்கொண்டாட்டங்களில் தங்கள் குடும்பத்தினர் உறவினருடன் கலந்து கொள்ள அவர்கள் மிகவும் ஆவலாகப் புறப்பட்டிருந்தனர். மற்றப் பயணிகள் ஐரோப்பாவின் பல பகுதிகளையும், தென் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்குப் பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள். விபத்தில் சிக்கியர்களில் மற்றொருவர் பிரிட்டனைச் சேர்ந்த மக்டொனால்ட் மற்றும் உதவி விமான ஓட்டியான கிளைவ் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

விமானம் இரவு 12.40 மணிக்கு சிசிலியில் உள்ள விமானத்தளத்தில் இறங்க வேண்டும். விமானத்தின் நிலை திருப்திகரமாகத் தான் இருந்தது. ஆனால் கடல் தான் கடும் காற்றினால் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

விமானம் கடலில் விழுந்ததும் சிலர் பாதுகாப்புப் பட்டியை அணிந்த வண்ணம் இறந்து விட்டனர். உயிருடன் இருந்தவர்களிற் சிலர் நீந்தித் தப்பிக்க முயன்றனர்.

இந்நிலையில், கொந்தளிக்கும் கடலில் வீழ்ந்துடைந்த விமானத்திலிருந்து வெளியேறிய பெற்றோலும், மசகு எண்ணையும் கடல் நீரின் மேலே பரவின. உயிருடன் உள்ளவர்களின் கூக்குரல் மெள்ள மெள்ளக் குறைந்து முனகலாக மாறியது. சிலர் பயங்கரத்திலிருந்து விடுபட்டு அலைகளின் அடியில் மூழ்கிக் கடலின் அடிக்கே சென்று விட்டனர். பெற்றோல் மற்றும் மசகுஎண்ணை ஆகியவற்றால் ஏற்பட்ட மூச்சுத் திணறலில் இருந்து தப்பிய பலாரிக்கோ எனும் பெண்மணி கடலில் தத்தளித்தபடி நீந்தும் சமயம் "அம்மா எங்கே இருக்கிறாய்? நான் மூழ்கிக் கொண்டிருக்கிறேன்" என்ற குரல் கேட்டது.

33 வயதான பலாரிக்கோ தன் உயிருக்காகப் போராடிக் கொண்டே அவளின் மகனின் அபயக் குரலைக் கேட்டு அவனை நோக்கி விரைந்து நீந்தினாள். கடலில் மூழ்கிக் கொண்டிருந்த பதின்னான்கு வயதான மகன் ஜெரியின் கையைப் பிடித்துத் தூக்கினாள். "இதோ இருக்கிறேன் கையைக் கொடு" என்றாள்.

அந்தத் தாயையும், மகனான ஜெரியையும் சேர்த்துக் கடலில் மூழ்கிய விமானத்திலிருந்து உயிர்தப்பியவர்கள் இருபத்தொரு பேர். மொத்தமாகப் பயணித்தவர்கள் தொகை 146 பேர்.

உயிர் பிழைத்த பலாரிக்கோ அந்த விமானத்தில் பயணம் செய்ததை நினைவு கூர்கிறாள் "சிலர் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருந்தனர். நானும் எனது மகன் ஜெரியும் விமானம் தரையிறங்கும் சமயத்தில் தூங்கிக் கொண்டிருந்தோம். விமானம் முதலில் தரை தட்டி எழும்பியதும் உள்ளே எரிந்து கொண்டிருந்த விளக்குகள் யாவும் எதிர்பாராத வாறு அணைந்துவிட்டன. எங்கும் ஒரே கும்மிருட்டு. பயணிகள் பீதியில் அலறினர். மறுவிநாடி எங்களை மூழ்கடிக்கும் அளவுநீர் உள்ளே வந்தது. விமானம் 45 பாகை கோணத்தில் சாய்ந்திருந்தது.

எங்களைச் சுற்றியிருந்த பயணிகள் பீதியுற்றுக் கூக்குரலிட்டுக் கொண்டே பாதுகாப்புப் பட்டியை அவிழ்க்கப் போராடினர். மற்றவர்கள் நழுவிக் கீழே சென்றனர். சிலர் திறந்த கதவுகள் வழியே வெளியே சென்றனர். இன்று வரை நான் விமானத்திலிருந்து எப்படி வெளியே வந்தேன் என்பது புரியவே இல்லை. மகன் ஜெரியைக் காணாமல் அழுது கொண்டே நம்பிக்கை இழந்த நிலையில் கடலில் போராடிக்கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில் உண்மையில் அது கடவுளின் அருள் என்று தான் கூற வேண்டும். "அம்மா எங்கே இருக்கிறாய்" என்றகுரல் கேட்டது. நான் என் மகனின் கையைப் பற்றிக் கொண்டேன். எப்படித்தான் என் உயிருக்காகப் போராடிக் கொண்டே மகனைக் காப்பாற்ற முயன்றேனோ தெரியவில்லை. எல்லாம் அதிசயம் தான்.

கடவுள் தான் எங்களுக்காக அந்தப் படகை அனுப்பியிருக்க வேண்டும். அதன் பிரகாசமான விளக்கொளி என்மகன் ஜெரியின் முகத்தில் படர்ந்தது. அவன் மயக்கமடைந்து விட்டான்.

"தைரியமாக இருங்கள்" என்று ஒரு குரல் கேட்டது. ஜெரி கண்விழித்தான். நான் அவனை முத்தமிட்டேன். ஆயினும் அவன் மீண்டும் மயக்கமானான்.

கடலில் தவிப்பவர்களைக் காப்பாற்ற விரைந்து வந்த பத்து மீன்பிடிப் படகுகளில் ஒன்றுதான். பலாரிக் கோவையும், மகன் ஜெரியையும் நோக்கி வந்த படகு. விமானம் கடலில் விழுந்ததைக் கண்ணுற்ற மீனவர்கள் தங்கள் படகுகளை அத்திசை நோக்கி விரைந்து செலுத்தினர். உயிருக்குப் போராடும் மக்களைக் காப்பாற்ற எண்ணினர். விமானம் தலைகீழாகக் கடலினுள் செல்லும் பயங்கரத்தையும் அவர்கள் நேரில் கண்டனர்.

கொந்தளிக்கும் கடலில் படகுகளின் விளக்குகள் மற்றும் சில ரோர்ச்லைட்டுக்கள் ஆகியவற்றின் உதவியுடன் மீட்புப் படகிலுள்ளோர் தொடங்கினர். கடலின் மீது விமானத்தின் உடைந்த பாகங்கள், கிழிந்த உடைமைகள், பொம்மைகள், நத்தார்ப் பண்டிகைப் பொருட்கள் என்பன மிதந்தன. காப்பாற்றப்பட்டவர்களில் வெனிசுலா கரகாஸ் பகுதியைச் சேர்ந்த ஒருவராவார். அவர் ஒருவாறு தனது தந்தையாரைக் கண்டுபிடித்தார். அவர் இருதய நோயாளி, அவரைக் காப்பாற்ற படகிலிருந்து கடல் நீரினுள் கயிற்று ஏணிகளைப் இறக்கி விட்டனர். ஒலிவர் அதனைப் பிடித்த வேளையில் "என்னால் முடியாமல் உள்ளது" என்றவாறு கூறிக் கொண்டே ஒலிவரின் தந்தை கடலில் மூழ்கினார்.

அதேபோன்று, பிரான்ஸ் நாட்டுப் பெண் வைத்தியரான றேவலும் காப்பாற்றப்பட்டவர்களில் ஒருவர். அவர் இவ்விதமான விபத்தில் தனது கணவரையும் மகளையும் இழந்துவிட்டார். இறந்தவர்களில் நான்கு குழந்தைகளும் அடங்குவர்.

அந் நள்ளிரவில் நடந்த அதிசயமான சம்பவம், தாயாரை மகன் அழைத்ததும், தாயாரும் அந்தக் காரிருளில் ஏதோ விதத்தில் மகனைக் கண்டுபிடித்துக் காப்பாற்றியதுமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன்



22

மலர்வுடன் அந்தப் பெண் சொன்னாள்-
"மிஸ்டர் யூலியன்! இதே வீதியில் உள்ள 62 ஆம் இலக்க வீட்டினை நீங்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம் அனுமதி கிடைத்துவிட்டது"
யூலியனின் கையில் வீட்டின் திறப்பும், வரவேற்பாளினியின் கைகளில் முற்பணமும் தஞ்சமடைந்தன.
அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் யூலியன் 'அன்ட் கோ' அந்த வீட்டில் குடிபுகுந்தது.

2010 ஏப்ரல் 01. உலக முட்டாள்கள் தினம்.

எல்லா விடயங்களிலும் தன்னைவிட இந்த உலகில் எந்தக் கொம்பனும் இல்லை என்கிற கணக்காகப் பீற்றிக் கொள்கிற அமெரிக்காவை முட்டாளாக்கிவிட்டு , ஐஸ்லாந்து விமானநிலையத்தில் யூலியன் வந்திறங்கினான். நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவரும் யூலியனிடன் கூடவே வந்திருந்தார்.

அமெரிக்காவை விட்டு யூலியன் ஐஸ்லாந்துக்குப் போனதால் ஐஸ்லாந்தைப் பற்றிய ஏதோ ஒரு இரகசியத்தையே யூலியன் அவிழ்க்கப்போகிறான் என அமெரிக்கா நினைத்திருந்தது. எனினும் எதற்கும் இருக்கட்டும்' என்னும் நினைப்பில் யூலியன் மீதான சி.ஐ. ஏயின் கண்காணிப்பை அது விலக்கவில்லை. ஐஸ்லாந்தில் இறங்கிய கையோடு 'ருவிட்டர்' இணையத்தளத்தின் மூலம் தன் நண்பர்களுடன் உரையாடிய யூலியன் "எங்களைப் பற்றி எவரும் கவலைப் படாதீர்கள். நாங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பில் இருக்கிறோம்'' எனக் கிண்டலாகச் சொன்னான்.

இந்த இணைய அரட்டைக்குப் பிறகு யூலியனுக்கு நேரமே இருக்கவில்லை. கடமை அவனை அவசரமாக அழைத்தது.

விமானநிலையத்தில் இருந்து யூலியன் வாடகைக்காரொன்றின் மூலம் ஐஸ்லாந்தின் ஒதுக்குப் புறமான ஊரொன்றுக்குச் சென்றான். வழியில் மேலும் ஐந்து பேர் அந்தக் காருக்குள் நுழைந்து கொண்டனர். அவர்கள் ஐவரும் விக்கிலீக்ஸின் ஐஸ்லாந்துக் கிளைக்குப் பொறுப்பானவர்கள். யூலியனின் வளர்ப்பில் உருவான குஞ்சுகள். ஏழுபேரையும் சுமந்தபடி விரைந்த கார், வீடுகளை வாடகைக்குக் கொடுக்கும் நிறுவனம் ஒன்றின் முன்னால் நின்றது.

முகத்தில் எவ்வித சலனமுமின்றி யூலியன் நிறுவனத்துக்குள் நுழைந்தான். "உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா?'' முகத்தைப் போலவே குரலிலும் இனிமையைச் சேர்த்தவாறு வரவேற்பாளினி ஒருத்தி யூலியனை வினவினாள்.

"நிச்சயமாக. ஒரு வீடு வாடகைக்குத் தேவை" அழுத்தம் திருத்தமான குரலில் யூலியன் பதிளளித்தான்.

"எத்தனை நாளைக்கு?"

"ஐந்து நாள்களுக்கு!"

"என்ன நோக்கத்துக்காக?"

"எரிமலைகள் பற்றிய ஆய்வுக்காக"

தன்னுடைய கேள்விகளையும் யூலியனின் பதில்களையும் பதிவு செய்து கொண்டபின், முகமலர்வுடன் அந்தப் பெண் சொன்னாள்-

"மிஸ்டர் யூலியன்! இதே வீதியில் உள்ள 62 ஆம் இலக்க வீட்டினை நீங்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம்'' அனுமதி கிடைத்துவிட்டது. யூலியனின் கையில் வீட்டின் திறப்பும், வரவேற்பாளினியின் கைகளில் முற்பணமும் தஞ்சமடைந்தன.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் 'யூலியன் அன்ட் கோ' அந்த வீட்டில் குடிபுகுந்தது.காரில் இருந்து யூலியன் கொண்டு வந்திருந்த மடிக் கணினிகள் இறக்கப்பட்டு, வீட்டினுள் உள்ளக இணைப்புக் கொண்டவையாக அவை பொருத்தப்பட்டன. நாலைந்து தரம் கடைகளுக்குச் சென்று வந்த கார் ஏராளமான உணவுப் பொருள்களைச் சுமக்கவேண்டியிருந்தது. அந்த உணவுப்பொருள்கள் எல்லாமே குளிர்சாதனப் பெட்டிக்குள் அடுக்கி வைக்கப்பட்டன. ஒவ்வொருவருக்குமுரிய வேலைகள் பற்றிய விபரம் அட்டவணைப்படுத்தப்பட்டது.

வீட்டிலிருந்த தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டன. ஜன்னலோரமாக திரைச் சேலைகள் தொங்க விடப்பட்டது.இதனால் உள்ளே என்ன நடக்கிறது என்பதை எவராலும் ஓரளவுக்குத்தானும் யூகிக்க முடியாது. கிட்டத் தட்ட ஒரு மணித்தியாலத்துக்குப் பின் அந்த இடம் ஒரு போர்க்கட்டுப்பாட்டு அறை போல் மாறியிருந்தது. அதன் பின் யூலியன் சிக்னல்' கொடுக்க வேலை தொடங்கியது.

அந்த வேலை முடியும் வரை- நான்கு நாள்களாக- அவர்கள் அனை வரும் உரையாடிக்கொண்ட சந்தர்ப்பங் கள் மிகக்குறைவு.

உள்ளே இருந்தவர்கள் உலகைத்தையே மறந்தவர்கள் போல கடமையே கண்ணென மூழ்கியிருக்க, அந்த வீட்டைச் சுற்றி வளைய வந்த சி.ஐ. ஏ உளவாளிகள் வீட்டினுள் என்ன நடக்கிறது என்பது தெரியாமல் குட்டி போட்ட பூனை மாதிரி குறுக்கும் மறுக்குமாக நடந்து திரிந்ததுதான் மிச்சம்.

ஐஸ்லாந்தில் எரிமலைகள் அதிகம்.

அண்மையில் கூட ஐஸ்லாந்தில் எரிமலை ஒன்று குமுறியதால் ஐரோப்பாவுக்கான விமானப் போக்குவரத்தே துண்டிக்குமளவுக்கு வான்வெளியைத் தூசுமண்டலம் ஆக்கிரமித்திருந்தது. ஆனாலும் எரிமலைகளை ஏன் யூலியன் ஆய்வு செய்ய வேண்டும் என்பதுதான் சி.ஐ,ஏயின் கேள்வி. அந்தக் கேள்விக்கு நான்கு நாள்களில் விடை கிடைத்தது. மூடப்பட்டிருந்த வீட்டிலிருந்து ஒரு எரிமலை வெடித்தது.அதன் தகிப்பில் அமெரிக்காவே வெந்துபோனது. சொல்லாமல் வெடித்த எரிமலையின் பெயர் 'சமகாலக் கொலைகள்'.

(திரைகள் இன்னும் திறக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிலவுப் பயணம்

ராஜ்சிவா

# நிஜமா? 6

## இன்னமும் விலகாத மர்மங்கள்

நவீன விண்வெளிப் பயணிகள் கூட இந்த உயரத்தைத் தாண்டியதே இல்லை. ஆனால் 1969 இலிருந்து 1972 வரை சந்திரனுக்குச் சென்ற அப்போலோ மிசன் மட்டுமே இந்த உயரத்தைத் தாண்டின என்று சொல்லப்படுகின்றது. அதுவும் முதலாவதாக பூமியைச் சூழ்ந்திருக்கும் உள்பட்டியை மட்டுமல்லாமல் இரண்டாவதாகவும், மிக ஆபத்தானதுமான வெளிப்பட்டியையும் ஊடறுத்துச் சென்றிருக்கின்றனர். இது நடந்தது நாற்பது வருடங்களுக்கு முன்னர். விண்வெளி ஆடை வடிவத்திலேயோ தலைக் கவசத்திலேயோ இப்போதிருப்பது போல இல்லாமல் விஞ்ஞான வளர்ச்சியடையாத நாற்பது வருடத்துக்கு முன்னர் உள்ள நிலையில் சென்றிருக்கிறார்கள். இதற்குச் சாத்தியமே இல்லை என்று அடித்துச் சொல்கிறார்கள். இந்தப் பட்டிகளினூடாக போனது மட்டுமல்லாமல் திரும்பியும் வருவது என்று இரண்டு தடவை ஊடறுத்துச் செல்வது நடக்கவே முடியாத காரியம் என்கிறார்கள். இன்றிருக்கும் நிலையில் கூட இதற்குச் சாத்தியம் இல்லையென்று தான் கருதுகிறார்கள். அதனால் தான் இப்போதும் கூட சந்திரனுக்கு மனிதன் செல்லும் திட்டங்களை யெல்லாம் 2020 ஆம் ஆண்டுக்கு அப்புறமான திட்டங்களாக அரசுகள் அறிவிக்கின்றன. அமெரிக்க அரசே சந்திரனுக்குச் செல்லும் புதிய திட்டம் பற்றி இப்படித்தான் சொல்லியிருக்கிறது. நான் இந்தப் பட்டிகள் பற்றி எழுதியதை வாசிக்கும் போது. உங்களுக்கு அதன் பயங்கரம் சரியாகப் புரிந்திருக்காது என்றே நம்புகிறேன். அங்கு நடக்கும் விளைவுகளை 'ஷூட்டிங் ஸ்டார்ஸ்' என்று தான் சொல்கிறார்கள். அதாவது துப்பாக்கியால் சுடப்படும் குண்டுகள் போல - துகள்கள் ஒளிச்சிதறல்களாக அங்கு மோதிக் கொண்டே இருக்கின்றன. அந்தப் பட்டிகளுக்கு மிகவும் கீழே, விண்வெளியில் ஆராய்ச்சிக்கெனச் செல்லும் விண்வெளிவீரர்கள் மிகவும் அவதானமாக இருக்கும்படி எச்சரிக்கப்பட்டே அனுப்பப்படுகிறார்கள். இப்போது கிடைத்திருக்கும் புதிய தகவல் மேலும் அதிர்ச்சியைக் கொடுப்பதாக இருக்கிறது. அதாவது வலிமையானதும், பயங்கரமானதுமான மூன்றாவது பட்டி ஒன்றையும், 2012 செப்ரெம்பரில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப் புதிய பட்டியைக் கண்டுபிடித்தது நாஸாதான். மனிதன் இந்த மூன்றையும் தாண்டி சந்திரனுக்குச் சென்றான் என்பதை நம்பப் பலர் மறுக்கிறார்கள். வான் அலன் பெல்ட்டைத் தாண்டி மனிதன் செல்வது என்பது இப்போதைக்குச் சிக்கலான ஒன்றுதான் என்கிறார்கள்.



வான் அலன் பட்டியையும் தாண்டி மனிதன் சந்திரனுக்குச் சென்றான் என்றே வைத்துக் கொள்வோம். அப்போது சந்திரனில் இறங்கிய மனிதனின் செயற்பாடுகளைப் படங்களாகவும் காணொளிகளாகவும் எடுத்து அமெரிக்கா வெளியிட்டிருக்கின்றது. அந்தப் படங்களி லும் காணொளிகளிலும் பல முரண்பாடுகளும் ஏமாற்று வேலைகளும் நடைபெற்றிருக்கின்றன என்று சூழ்ச்சிக் கோட்பாட்டாளர்கள், அந்தப் படங்களையே ஆதாரங்களாக வைத்துக் குறிப்பிடுகின்றனர். அந்தப் படங்களை இந்தக் கட்டுரைகளில் பல இடங்களில் நீங்கள் பார்க்கும் வண்ணம் தந்திருக்கிறேன். நீங்களும் அவற்றைப் பாருங்கள். அமெரிக்கா செய்த ஏமாற்று வேலைகள் என்று குறிப்பிடும் சம்பவங்கள் இவைதான்..!

சந்திரனில் இறங்கிய மனிதன், அமெரிக்காவின் கொடியை அங்கு நட்டபோது அந்தக் கொடி காற்றில் அசைவது போல இங்கும் அங்கும் அசைவது வீடியோக் காட்சிகாளகக் காட்டப்பட்டது. ஆனால் சந்திரனில் காற்று என்பதே இல்லை. அப்படியெனில் எப்படிக் கொடி காற்றில் அசைந்திருக்க முடியும் என்று கேட்கப்பட்ட கேள்வியை யாராலும் தட்டிக் கழிக்க முடியவில்லை. அந்தக் கொடி அலுமினியக் கம்பிகளில் மாட்டப்பட்டிருந்தது. என்றும் கொடியை நட்டபோது அலுமினியத்தில் ஏற்பட்ட அதிர்வே கொடி காற்றில் அசைவது போலத் தோன்றக் காரணம் என்று நாஸாவால் கொல்லப்பட்டாலும் அதை நம்புவது பலருக்குக் கடினமாகவே இருந்தது. *(மர்மங்கள் தொடரும்)*

# தோல்வியில் தளர்ந்து விடாதீர்கள்

செம்மை ஆக்கப்படாத யோசனைகளைக் கூறினாலும் அதன் மூலம் எப்படி நீங்கள் பணம் சம்பதிக்க முடியும்? "பரிபூரணம் ஆக் கப்பட்ட யோசனையைத் தான் உருவாக்கு வது" என்று தீர்மானித்துக் கொண்டால் நீங்கள் தோல்வி அடைவீர்கள்.

உருப்படியான யோசனைகளை உருவாக்கியவர் தோமஸ் அல்வா எடிசன். அவர் தமது கண்டுபிடிப்புக்களில் 1,093 பொருள்களுக்கு மட்டும் காப்புரிமை பெற்று உலகுக்கு வழங்கினார். அவற்றுக்கு காப்புரிமை பெறுவது பற்றி அவர் கவலைப்பட்டதே இல்லை. ஆக நாம் எடிசனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

தமது யோசனைகள் பரிபூரணமாக, குறைகளே இல்லாமல் இருக்க வேண்டும் என்று எடிசன் எண்ணியதே இல்லை. பயனுள்ள யோசனைகளை - வடிவங்களை உருவாக்குவதில் தான் அவர்அக்கறை கொண்டார். தமது யோசனைகளை எல்லோரும் அறியுமாறு செய்தார். தமது யோசனைகளை செம்மைப்படுத்த எல்லாருக்கும் வாய்ப்புக் கொடுத்தார்.

உண்மையில் தோமஸ் அல்வா எடிசனுடைய எல்லா யோசனைகளும் செம்மைப்படுத்தப்பட்டன. எடிசனுடைய பேசும் இயந்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது தான் பிறகு கிராமபோன் ஆக அபிவிருத்தி செய்யப்பட்டது. பின்னர் அதுவே "ஸ்டிரியோபோனிக் சவுண்ட் சிஸ்ரம்" என்று வளர்ச்சி அடைந்தது.

எடிசன் கம்பிச் சுருள்கள் கொண்ட ஒரு சாதாரண பல்பைக் கண்டுபிடித்தார். அதிலிருந்து இன்று ஒளி அமைப்பு எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதைப் பாருங்கள். செயல்படுத்த முடியாத யோசனையாக இருந்தாலும் கூட அந்த யோசனை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? எப்படியாவது - யாராவது அந்த யோசனையைத் சீர்திருத்தலாம். எடுத்துக் கொள்ளலாம். சேர்த்துக் கொள்ளலாம். செம்மைப்படுத்தலாம். நீங்கள் சொல்கின்ற யோசனை அதற்கெல்லாம் இடமளிப்பதாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

ஏன் என்றால் சங்கிலித்தொடர் போன்ற யோசனைகளை நீங்கள் உருவாக்கத் தொடங்கிவிட்டீர்கள். இதனால் நீங்கள் பெருமை அடைவீர்கள். பதவி உயர்வு பெறுவீர்கள். இந்தயோசனையைப் பெற்று எடுத்தவர் என்ற முறையில் பணக்காரர் ஆவீர்கள். உங்களுடைய யோசனையைக் கொடுத்தவர்களுக்கு என்ன லாபம் என்ன வெகுமதிகள் கிடைக்குமோ, அவற்றில் உங்களுக்கும் பங்கு கிடைக்கும். நீங்கள் ஒரு யோசனையை உருவாக்கிய காரணத்தால் தான்- அதை மேம்படுத்த வாய்ப்புக் கிட்டியது. யோசனையே இல்லாவிடில் மேம்பாட்டுக்கு இடம் ஏது?

ஆக இதை நினைவில் கொள்ளுங்கள்! ஒவ்வொரு யோசனையும் (அதுநடைமுறை சாத்தியமாக இருந்தாலும் அல்லது குறைகளுடன் இருந்தாலும்) ஒரு ஆரம்பம். ஏன்என்றால் எல்லா எண்ணங்களும் குறைபாடுகள்உடையவைதான். மனிதன் உருவாக்கிய எல்லாமே குறைபாடுகளுடன் கூடியவைதான்.

மனிதனுடைய அறிவு அனுபவம் தொழினுட்பம் இவை காலத்தோடு வளருகின்றன. அவற்றுக்கு ஏற்ப எல்லா கருத்துக்களும் எண்ணங்களும் யோசனைகளும் செம்மையாக்கப்படுகின்றன. யோசனைகள் மதிப்பிடப்படுகின்றன. மதிப்பீடு செய்வது என்பது மற்றஎல்லாவற்றையும்விட யோசனைகளுக்கு மெத்தப்பொருத்தமானது. வாழ்வதற்காக மாறிக்கொள்வது. நிலைமைகளுக்கு ஏற்ப வாழ்ந்துவிடுவது என்பது யோசனைகளும் எண்ணங்களும் மாறக்கூடிய நிலமைகளைத் கருத்தில் கொண்டு அதற்கேற்ப சீர் திருத்தப்பட வேண்டும்.

ஆக உங்களுடைய யோசனைகளை சமர்ப்பிக்கும் போது, அறிமுகப்படுத்தும் போது, நீங்கள் தயங்க வேண்டியதில்லை. அஞ்ச வேண்டியதில்லை. நீங்கள் சமர்ப்பிக்கும் யோசனைகள் குறைகளே அற்றதாக இருக்கவேண்டும் என்பதில்லை. மாறாக எந்த ஒரு யோசனையும் பரிபூரணமாக இருந்தது இல்லை. எடிசன் தெரிவித்த யோசனைகள் உட்பட தொடக்கத்தில் உங்கள் யோசனைகள் செயல்படத் தகுந்தவையாக இருக்கவில்லை என்றாலும் யோசனையை வெளியிட்டதே ஒரு ஆரம்பம் தான். தொடக்கம் இல்லாவிடில் வெற்றிகரமான நிறைவு எது?

வெற்றிபெறத் தவறுவதற்கும்,தோல்விக்கும் வேறுபாடு உண்டு. இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். வெற்றி பெறத் தவறுவது முன்னேறுவதற்காக. இதுவே யோசனைகளைத் உருவாக்கிற அடிப்படைத் தன்மை. வெற்றி எய்தவில்லை என்பதனால் நீங்கள் தளர்ந்து விட வேண்டாம். அதில்நட்டம் இல்லை! ஒவ்வொரு முறையும் வெற்றியைத் தவற விடும் போது நீங்கள் புதிதாக ஒன்றைப் பெறுவீர்கள்.

**சுடர் ஒளி வாசகர்களே**

குடத்தில் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள். தரமானவை
பிரசுரிக்கப்படும்.


படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி:
சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்





''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்ற அந்த அலறலைக் கேட்டதும் இளவரசர்களுக்கு இன்னும் பயம் அதிகரித்தது.

''நம்மைப் போலவே வேறு சிலரையும் மந்திரக் கிழவி கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கிறாளோ?'' என்று சந்தேகத்தோடு கூறினான் சந்திரவர்மன்.

''நானும் அப்படித் தான் நினைக்கிறேன் சந்திரா! எதற்கும் அந்த அலறல் ஏன் எழுந்தது என்று பார்த்துவிட்டு வருவோம்'' என்றான் இந்திரவர்மன். இப்படிக் கூறியதோடு மட்டும் அல்லாது மாளிகையை விட்டு நகரவும் ஆரம்பித்துவிட்டான் இந்திரவர்மன். எனினும் அவனின் தோளை இறுக அழுத்தி, தன் சுட்டுவிரலை முன்னால் நீட்டினான் சந்திரவர்மன். அவன் விரல் நீட்டிய திசையிலே உடலெங்கும் தீ கொழுந்துவிட்டெரிய, ஒரு மலைப் பாம்பொன்று இவர்களை நோக்கி வெகுவேகமாக வந்து கொண்டிருந்தது. தன் பெரிய நாக்கை வெளியே நீட்டி இளவரசர்களை அப்படியே விழுங்குவது போன்ற ஆவேசத்துடன் வந்து கொண்டிருந்த பாம்பைக் கண்டதும் முன் நகர்ந்து கொண்டிருந்த இந்திரவர்மன் அப்படியே நின்றான். ஏதோ ஒரு அர்த்தத்தோடு சந்திரவர்மனை நோக்கினான். அதன் பிறகு இருவரது கரங்களும் தமது வாளை உருவின.

(மந்திரக் கிழவி வருவாள்...)

# தெரிந்து கொள்வோம்



அதிகமாகப் பசி எடுக்கும்போது தலை சுற்றல், மயக்கம் வருகிறது. ஆனால், அதிகமாக சாப்பிட்டால் தூக்கம் வருகிறதே... ஏன்?

பட்டினியாக இருக்கும்போது, இரத்தத்தில் குளுக்கோஸ் மள மளவென்று குறைந்து விடுகிறது. மூளைக்கு வழக்கமான அளவு குளுக்கோஸ் கிடைக்காவிட்டால் தலை சுற்றல், மயக்கம் என்று சில நாடகங்களை நடத்திக் காட்டும். இவை மூளை நமக்குத் தரும் அறிவுறுத்தல்கள். நாம் கண்டுக் கொள்ளாமல் இருக்கும் போது அது சீர்செய்து கொள்கிறது.

மாறாக, நாம் அதிகமாகச் சாப்பிடும் போது, இரத்த ஓட்டம் வயிற்றுக்குத் திரும்பி விடுவதால், மூளை ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புகிறது. தூக்கம் கண்களைச் சுழற்றுகிறது.

மருந்து வகைகளில், நாம் உட்கொள்ளும் மாத்திரையின் உறை வயிற்றுக்குள்ளே சென்று என்ன ஆகிறது?

மருந்து மாத்திரைகளின் மேலுறை ஜெலட்டின் என்ற புரதப் பொருளால் செய்யப்பட்ட சவ்வு. இது வயிற்றுக்குள் சென்றதும் அங்குள்ள அமிலம் மற்றும் ஜீரண நொதிகளின் செயலால் ஜீரணமடைந்து விடும்.

உடலுக்கு எந்தவித ஆபத்தும் செய்யாது. ஜெலட்டின் விலங்கு களின் குருத்தெலும்பு, கொம்பு போன்ற பகுதியிலிருந்து கரைத்தெடுத்து சுத்தம் செய்யப்பட்டே எடுக்கப்படுகிறது.

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 24.10.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).

**கேள்வி:-**

அண்மையில் கடத்தப்பட்ட லிபிய நாட்டுப் பிரதமரின் பெயர் என்ன?

பதில்:- ..........................................................

பெயர் :- ..........................................................

தரம் :- ..........................................................

பாடசாலை :- ..........................................................

அனுப்ப வேண்டிய முகவரி:
கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

08

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 06**

சரியான விடை - **க.வி.விக்னேஸ்வரன்**

இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 'நொ தேர்ண் கொம்பியூட்டர்ஸ்' வழங்கும் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -


**பத்ரா பிரபாஹரசர்மா**

தரம் - 09 , அ/பெப்பிஸ் தமிழ் மகா வித்தியாலயம்.

**பாராட்டுப் பெறுவோர்:-**

01. எம்.எம்.அப்துல்லாஹ். தரம் - 3. அஸ்ஸம்ஸ் முஸ்லீம் வித்தியாலயம்.
02. நீ.குறுஞ்சிகன். தரம் - 9. கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை.
03. உ.டிலக்ஷிகா. தரம் - 8. யா/வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி.
04. நி.டிஷாந். தரம் - 4. க.மு.சரஸ்வதி வித்தி. பெரியநீலாவணை. கல்முனை.
05. மு.ஹரினி . தரம் - 03. சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி. மன்னார்.

**பரிசுக்கான அனுசரணை:-**




# பாசக்காரப் பறவை

பறவைகள் உலகிலேயே பல்லாயிரக்கணக்கான இனங்கள் இருக்கின்றன. அதிலே, கொம்பலகுப் பறவை என்று ஓர் இனம். இப்பறவையின் அலகின் மேல் கொம்பு போல் அமைப்பு உள்ளது. இப்பறவை தன் சோடியை சிறை வைக்கும் பறவையாகும்.

இவை இயற்கையாக அமைந்துள்ள பொந்துகளிலோ அல்லது மரங்கொத்திப் பறவை விட்டுச் சென்ற மரப்பொந்திலோ வசிக்கும். பெண் பறவை முட்டையிடும் சமயத்தில், அதை இக்கூட்டினுள் அடைத்து ஆண் பறவை அப்பொந்தை மூடிவிடும். மண், செரிக்கப்பட்ட உணவு, உமிழ்நீர் ஆகியவற்றைக் கொண்டு பொந்தின் வாயிலில் சுவர் போல் கட்டி அதை அடைத்துவிடும். அந்தச் சுவரில் ஒரே ஒரு சிறு துளையை அமைத்திருக்கும். அந்தத் துளையின் வழியாக தன் சோடிக்கு இரை தேடி வந்து ஆண் பறவை ஊட்டும். முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வெளியே வரும் வரை பெண் பறவைக்கு இந்த சிறைவாசம் தான். இப் பறவையானது. இறகுகளை உதிர்க்கும் சமயங்களிலும் பெண் பறவை இரை தேட முடியாமலும், பறக்க முடியாமலும் தவிக்கும். அப்போதும் இதேபோல் பொந்தில் அடைத்து வைத்து பெண் பறவைக்கு இரைகொடுத்து காப்பாற்றும். அப்பப்பா பாசக்கார ஆண் பறவை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளுகை

அவன் புறப்பட்ட போது
ஏராளமானவற்றைத் தன்னோடு எடுத்துப் போனான்
மார்புச் சட்டைப் பையில்
சட்டமிடப்பட்டிருந்த
ஜெகன் நாத்தின் சிறிய நிழற்படமொன்று
சிறிய துணியொன்றில் பக்குவமாய்ப்
பொதி செய்யப்பட்ட
அவனது புண்ணிய தானத்துத் தானியம் கொஞ்சம்
சொந்தத் தோட்டத்திற் பறித்த அவரைப் பழமான
மாம்பழங்கள் எட்டு
இரவிரவாய்க் கண்விழித்து அம்மா தயாரித்த
வெண்ணெய்யும் சர்க்கரையும் கலந்த
அரிசிப் பலகாரத் துண்டங்கள் பத்து
கூடவே பொக்கிஷங்கள் என
ஒற்றைப்பின்னலும் ஆழ்ந்து சூழன்றொளிரும்
கண்களுமாயிருந்த
சுமித்திராவின் திருமணத்துக்கு முந்திய நிழற்படம் ஒன்று....
மேலும், சுமித்திரா அவசர அவசரமாய் கன்னத்தில்
மின்னலேன ஆழப் பதிந்தரகசிய முத்தமொன்று...
கடும் வற்புறுத்தல்களுக்கும் 'கிற்காற்'
லஞ்சங்களுக்கும் பிறகு கிடைத்த
சோனாவின் பழக்கமில்லாத, வெட்கங் கலந்த
முத்தமொன்று
என அவன் சுமந்து போன எல்லாமும்
அவன் 'கார்கில்லைச்' சென்றடையும் வரை
உஷ்ணம் ஆறாதிருந்தன.
இன்னும் அவன், எண்ணற்ற அழுகைகளையும்
கண்களில் நிரம்பித் தளும்பிய கண்ணீர்த் துளிகளையும்
அவர்களின் முகங்கள் தொலைதூரத் தாரகைகளாய்
பார்வைக்கு மறையும் வரை
இதயத்திற்பொத்தியபடி
கொண்டுபோனான்.
ஆழ்ந்த உறக்கத்தில்
வீடு திரும்பினான்அவன்
மூவர்ணக் கொடியால் மூடப்பட்ட
ஒரு பேழையினுள்ளே
மூடிய விழிகளுடன்
பனியால் விறைத்த கன்னங்களுடனும்
வாடி வதங்கிய முகத்துடனும்
இம்முறை அவன் எதுவுமே கொண்டு வரவில்லை
சோனாலிக்காகப் பொம்மைகளோ, புதுச்சட்டையோ
சொக்லட்டோ
சுமித்திராவுக்கு சேலையோ
அம்மாவுக்கு பாரங் குறைந்த துப்பாட்டியோ
மூக்குக் கண்ணாடியோ
எதுவுமின்றி வெறுங்கையாய் வந்தான்
கொடிய அம்பு துளைத்த
ஒரு பாவமுமறியாத பறவையாய்
ஒருவானூர்தியில் வானத்தை வட்டமிட்டு
நிலத்தில் இறங்கினான்
பெருங் கூட்டத்தில்
திணறிய படியிருந்த
தன் அம்மாவிடமும்
தன் சுமித்திராவிடமும்
தன் சோனாலியிடமும்
அதுவும் தனது பிறந்த நாளன்று.

**ஆங்கிலமூலம் -- சிட்டகாந் மகோபாத்ரா ( இந்தியா)**
**தமிழில் -- ந.சத்தியபாலன்.**

# நெஞ்சக் கிளர்வு

• வசியன்

## ஹாய்! செல்லப்பா!! எழுதுவது.....



## கவனமாகப் பொழுங்கணும்

**MGR** துப்பாக்கிச் சூட்டில் தப்பிப் பிழைத்து, மீண்டும் செயற்படத் தொடங்கிய போது, ஒரு வயோதிப அம்மையார், அவரை நெருங்கி,
"எம்.ஆர்.ராதா மறியலுக்குப் போயிட்டாரு... ஆனால் நம்பியார், வீரப்பா இருக்கிறாங்க.... கவனமாகப் பொழங்கவேணும்" என்றாராம்.

* * *

இப்போ விஜய் நம்பியாரை நாம் மறந்து பல நாள்களாகி விட்டன.
ஐ.நாவும் அதுபற்றி ஒன்றும் உரைப்பதில்லை. ஆனால் கமலேஷ் சர்மா பற்றி வமர்சனங்கள் எழுந்துள்ளன.
தமிழர் விடயத்தில் எல்லோரும் ஒரே மட்டைகள் தான்.
எனினும்- கவனமாகப் பொழங்கணும்.


## க.பொ.த (சா/த) இல் விசேட சித்தி பெற துடிக்கும் மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!

**உங்கள் பரீட்சை வெற்றிக்கு உறுதுணையாக –நேரடியாக வழிகாட்டும் மாதிரி வினாத்தாள்களைத் தாங்கிய பரீட்சைக் கையேடான "வெற்றிப்படி"யின் இதுவரை வெளிவந்த 1 தொடக்கம் 16 வரையான கையேடுகளை வீட்டில் இருந்தே, மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளஓர் அரிய வாய்ப்பு.**

**குறிப்பு:**

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள **வினைத் திறன் மிக்க ஆசிரியர்களின் வேறுபட்ட சிந்தனைகளினால் உருவான சகல பாடங்களுக்குமான பல வினாத்தாள்** தொகுப்பை இக் கையேட்டில் மட்டுமே பயிற்சி செய்யமுடியும்.
2. கடினமான சில கற்றல் பகுதிகளை **இலகுவில் விளங்க - ஞாபகப்படுத்தி கொள்ள** வழிக்காட்டும் ஒரே கையேடு இதுவே.
3. 1-16 வரையில் வந்த வெளியீடுகளைத் தனித்தனியே பெறத் தவறியவர்கள் இதனை ஒரு தொகுதியாக எடுத்துக் கற்கும் போது **மிக விரைவாக எதிர்பார்க்கை வினாத்தாள்களைப்** பயிற்சி செய்யமுடியும்.
4. இக்கையேட்டின் முகப்புப் பக்கமானது **கற்கத் தூண்டும் நுட்பங்கள், வெற்றிபெற்றவர்களின்அனுபவ பகிர்வு** என்பவற்றைத் தாங்கி வெளிவருகின்றது.
5. **480/= பெறுமதியான 16 கையேட்டையும் இச் செயற்திட்டத்தின் ஊடாக 300/= க்குப் பெற்றுக் கொள்ள முடியும். அஞ்சல் கட்டணமாக 50/= அறவிடப்படும்.**
6. **விரும்பும் மாணவர்கள். இப் பணத்தை (350/=) Land mark Enterprises - என்ற பெயருடைய 126-1-001-0-3452799 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கி கிளையில் வைப்பிட்டு வைப்புத் துண்டையும் உங்கள் பெயர், தொலைபேசி இல., முகவரியையும்** குறிப்பிட்டு **கணக்காளர், 85,ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கிராண்ட்பாஸ் கொழும்பு -14** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் உங்கள் வீட்டிற்கு ஒரு வாரத்திற்குள் இக்கையேட்டுத் தொகுதி வந்து சேரும்.
7. உங்கள் தபாலில் இடது பக்க மேல் மூலையில் " **வெற்றிப்படி வினாத்தாள் தொகுதி** " என எழுதி அனுப்ப மறக்காதீர்கள்.

**இச் சலுகை 30/10/2013 வரை மட்டுமே.**

உங்கள் பரீட்சை வெற்றிக்கான உங்கள் கையேட்டுத் தொகுதியை பெற இன்றே மேற்படி முகவரிக்கு அஞ்சலிடுங்கள்.

8. நேரடியாக பெற்றுக் கொள்ள விரும்பும் யாழ் மாணவர்கள். யாழ் உதயன் அலுவலகத்திலும் வன்னி மாவட்ட மாணவர்கள் கிளிநொச்சி உதயன் அலுவலகத்திலும் 300/= க்கு பெற்றுக் கொள்ளலாம்.



**மேலதிக தொடர்புகளுக்கு**
**0714273035 / 0718400624**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பித்தன் பதில்கள்

**வே.வே. அகிலேஸ்வரன்,**
**மருதங்கேணியூர்.**

**கே :** கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடுமாம். என் வீட்டு பூவரசம் வேலிகள் கவி பாடுவது எப்போது?

**ப :** முந்தி ஒவ்வொரு வீட்டிலையும் தங்களுக்கான துணிகளை தாங்களே நெசவுத் தறியிலே நெய்து கொள்ளுவினம். இந்தத் தறியை கையால தான் இயக்க வேணும்.இதைத்தான் கட்டுத்தறி எண்டும் சொல்லு றவை. கம்பன் ஒரு கவிஞன் எண்டதாலை இயல்பாகவே இருக்கக் கூடிய இராகம், தாளம் எண்ட விஷயங்கள் அவருக்கு வாலாயப்பட்டிருக்கும். கம்பன் மட்டுமில்ல இசையோடு தொடர்புடைய எல்லோருக்கும் இது பொருந்தும். அப்படி அவைக்கு எந்த நேரமும் இசையைப் பற்றியே நினைச்சுக் கொண்டிருக்கிறதால, அவர் கட்டுத்தறியில நெசவு செய்யேக்குள்ளேயும் ஒரு தாள லயத்தோட தான் வேலை செய்வினம். அந்தக் கட்டுத்தறியின் சத்தம் கூட ஒரு கவிதை மாதிரித்தான் கேட்க இனிமையாக இருக்கும். அதைத்தான் கம்பன் வீட்டுகட்டுத்தறியும் கவிபாடும் எண்டு சொல்லுறவை.

உங்களுக்கு இப்ப என்ன கவலை? உங்கட வீட்டுப் பூவரசும் கவி பாட வேண்டும் அவ்வளவு தானே. பேசாமல் அதைத் தறித்து கட்டுத்தறியாக்கிப் போட்டு ஒரு தாளத்திற்கு நெசவு செய்யத் தொடங்குங்கோ. அதுக்குப் பிறகு உந்தப் பழமொழி " அகிலேஸ்வரன் வீட்டு பூவரசும் கவி பாடும்" எண்டு மாறாட்டி இந்தப் பித்தன் மொட்டையடிப்பான்.

# மதுவும் மாதுவும்...

**கே.கண்ணன்,**
**யாழ்ப்பாணம்.**

**கே :** மதுவுக்கும் மாதுவுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன பித்தா?

**ப :** உருவத்தில தான் வித்தியாசமே தவிர செயற்பாடெல்லாம் ஒண்டுதான். மது திரவமாக இருக்கும். மாது திண்மம்.ஆனால் இரண்டுமே பார்த்தவுடன் போதை தரும். ஆனால் அது அபாயமான போதை. இது பார்ப்பவர்களுக்கு நல்லாத் தெரிந்தாலும் தாமே வலியச் சென்று வயிற்று வலியை வாங்கிக் கொள்ளுவினம். மதுவும் மாதுவும் தாற வெறி உலகத்திலுள்ள மற்ற விஷயங்களை மறக்கச் செய்து போடும்.ஆனால் இந்தப் போதையிலிருந்து மீண்டு வெளியே வரேக்கை எங்கட மானம் போயிருக்கும். இப்பிடியெல்லாம் அவமானப்பட்டு அடி வாங்கி சூடு வாங்கின பூனையாகப் பம்மிக் கொண்டு இருந்தாலும் கூட பிறகும் அடுப்பங் கரைக்குப் போற மாதிரி, மதுவையும் மாதுவையும் கண்டவுடனே பட்டதெல்லாம் மறந்து போயிடும். பிறகென்ன பழையபடி வெறியும், அதால வாற அவமானமும் தொடரும்.





**கே.ரவிகரன்,**
**வெள்ளவத்தை.**

**கே :** பித்தரே! கிரிக்கெட்டின் கடவுள் என்று போற்றப்படும் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெற் உலகிலிருந்தே முற்றாக ஓய்வு பெறப் போகிறராமே?

**ப :** 19 வயதில் கிரிக்கெட்டுக்கு வந்த சச்சின் சாதித்தவைகள் ஏராளம். என்னென்ன சாதனைகள் எல்லாம் இருக்கோ அவ்வளவத்தையும் செய்த கெட்டிக்காரன்.

ஆள் கட்டையாக இருந்தாலும் சச்சினின் சாதனைகள் இமய மலை அளவுக்கு உயரமானவை. கிட்டத்தட்ட 24 வருசமாய் ஒரு நட்சத்திர வீரராய் பிரகாசிக்கிற வாய்ப்பு எல்லாருக்கும் கிடைக்காது.இன்னமும் பத்து வருசம் இதே துடிப்போட விளையாட சச்சினால முடியும். ஆனால் இளைய ஆட்களுக்கு வழி விடுறதுக்காக அவர் தன்ர 200 ஆவது ரெஸ்ட் போட்டியோட ஓய்வு பெறுகிறார். சச்சினுக்கு ஒரு சலூட்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 591

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | |
| 6 | | | 7 | | ■ | | ■ |
| | ■ | 8 | | | | ■ | 9 |
| | ■ | | ■ | | ■ | 10 | |
| ■ | 11 | | 12 | ■ | 13 | | |
| 14 | | ■ | | ■ | 15 | | |
| 16 | | 17 | | | ■ | | ■ |
| ■ | 18 | | | ■ | 19 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

**மேலிருந்து கீழ்**

1. விழா
2. அழகு
3. நொண்டியடித்தல்
4. நீரிலிருந்து நிலப்பகுதியைச் சென்றடை
5. யானை
7. கம்பு
9. சூடு தணிதல்
10. மகளது கணவன்
11. பதித்தல்
12. சிவனின் மறுபெயர்
13. 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜேர்மனியின் முக்கிய எழுத்தாளர்
14. பெரிய
17. உராய

**இடமிருந்து வலம்**

1. சீதைக்கு மற்றொரு பெயர்
4. ஆர்ப்பாட்டம்
6. புல்வெளி
8. விரைவானவன்
10. இணங்காதிரு/ உடலில் மச்சம்
11. சுவரில் ஓடித்திரியும் ஓர் உயிரினம்
13. கருத்திற் கொள்ள
14. சந்திரன்
15. படருவது
16. பாதுகாத்து வைக்கும் இடம்
18. தங்கத்தை உருக்கிச் சுத்தம் செய்தல்
19. ஒரு காட்டு மிருகம். இதன் இறைச்சிக்காக வேட்டையாடப்படுவதுண்டு.

### சொற்சிலம்பம் போட்டி இல. 591

சொற்சிலம்பம் 590 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு நவம்பர் 06 ஆம் மற்றும் நவம்பர் 13ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்.**
**361. கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 589 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பாசிப்பயறு, 2. தாள், 3. திவசம், 4.கேண்மை, 5.சடு, 6.பாகன், 8. அகதி, 10. குறும்பு, 12.அகப்பை, 13. அருப்பு, 14. குமுதம், 15. பலம், 16. கல, 17. மிக,

**இடமிருந்து வலம்**

1. பாதாதிகேசம், 7.சில்வண்டு, 8. அக, 9. சமை, 10. குகன், 11. பதம், 12. அறுதி, 13. அகம், 15.பருப்பு, 16.கலப்பை, 17. மித, 18. அலம்பு, 19. ஜகம்,

### போட்டி இல. 588 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** தரணியன் குகமூர்த்தி, இல64/22. கொட்டாஞ்சேனை வீதி. கொழும்பு - 03.

**2ஆம் பரிசு** ஜெ. ரஜனி, பிரதேச நிலஅளவைஅலுவலகம். லவ்லேன். திருகோணமலை.

**3ஆம் பரிசு** ஜெ. துசாந்தினி, மே/பா.வே.இராசநாயகம். சோறன்பற்று.பளை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) பத்ரா பிரபாகர ஷர்மா,
இல 119/16, மளாவ, பதலந்த, ஹெக்கிராவ.

(2) சா.விக்ரர் டமெல்,
இல.04, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(3) பிரதீபா கிருஸ்ணராஜ் சர்மா,
இல.68.கோவில் வீதி, கொழும்பு-15.

(4) வே.கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.

(5) த.சாம்பசிவம்,
இல.பி.4.எவ்.20, புளூமெண்டல் தொடர்மாடி,
கொழும்பு-13

(6) எம்.ஜே. பெர்னாண்டோ,
இல.30/3 சென்லூசியஸ் லேன்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

(7) சி.குகராஜா,
இல 36/35 கண்டி வீதி, சுமேதகம,
திருகோணமலை.

(8) சி.புஸ்பராணி,
"வசந்தபவனம்", மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

(9) பொ. பாலசுப்பிரமணியம்,
பிரதான வீதி, தம்பிலுவில் -01.

(10) ஆர். யோகராஜா,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## நாளைய பொழுது...



மதியாளர்களின்
கூட்டும்
மக்களின் ஓட்டும் வீதி வழியே
விவேகமாக செயல்பட்டதால்
புதிய கோட்டைக்கான
பொற்கதவு
திறக்கப்பட்டு விட்டது!

விட்டகுறை
விலகாது,
தொட்டதெல்லாம்
துலங்காது

பட்டிட்டபெரும்துயர்
பலகாலம் துரத்திவர,
வெட்டிவிட்ட விருட்சமாய்,
வீழ்ந்து பட்ட சமூகத்தை
தொட்டுத் தூக்கிட

துணிந்து விட்டார்கள்
தூயவர்கள்! இனி,
நாமார்க்கும்அடிமையில்லை!
நற்றமிழே நமக்குத் துணை!

ஏழைகள் அழுத கண்ணீர்,
தாலிகள் இழந்த
பெண்கள்,
கூரிய ஆயுதமாய்

கொள்கைக்காக ஒன்றுபட்டதால்
நேரிய தீர்ப்புகள்
நிலைமைகளை மாற்றியது!

தாலிகளை
அறுப்பதையே
தருமமாகக் கொண்டவர்கள்,
வேலிதாண்டி
குற்றம் செய்தார்,

வெட்கம் கெட்டு மமதையுடன்
ஆடியவர்(கள்) அடங்கிடவே
அதிகாரம் (தலை)
குனிந்திடவே

புதிய வரவுகள்
புறப்பட்டும் உணர்வுடனே!
சிரிப்புகளை
தொலைத்துவிட்டு

செழிப்புக்காக தவம்
இருந்தவர்கள்,
அழிவுகளுக்கு
அஞ்சவில்லை,

பழிகளுக்கும்
பயப்படவில்லை!

சுடுகாட்டின் சுடுமணல்
சோகங்களைச் சொன்னாலும்
வரலாற்றின் தோல்விகள்
வாசல்களை அடைத்தாலும்
கட்டுண்டவர்
திமிறிவிட்டனர்,
காத்திருந்தவர் எழுந்துவிட்டனர்
நாளைய பொழுதுகளை
நலமுறச் செய்வதற்கு!

நா.ஜெயபாலன்
பிபிலை.

## மனித இதயங்கள்



ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகும்
மனித இதயங்கள்
மழலைச் சொற்களை மாற்றிப் பேசும்
மனித இதயங்கள்
காதலிக்கத் தெரிந்ததும், கவிதைகள் எழுதத்தெரிந்த
மனித இதயங்கள்
கொஞ்சிப் பேசி சிரித்து விளையாடி உண்ணும்
மனித இதயங்கள்
தினமும் காசு பற்றிக் கதைத்துப் பேசத் தெரிந்த
மனித இதயங்கள்
அழகு அந்தஸ்து பார்த்து நேசிக்கும்
மனித இதயங்கள்
அன்புக்கும், பாசத்திற்கும் அர்த்தம் சொல்லும்
மனித இதயங்கள்
இதுவே மனித இதயங்களின்
இதயமற்ற இயல்புகள்

க.மதனா. முள்ளியவளை.


## கோபத்தின் அழகு



எப்போது நீ
எனை வெறுத்தாயோ
அன்றிலிருந்து
இன்றுவரை
உன்னை அதிகமாக
நேசிக்கின்றேன்
காரணம்
நீ சிரிப்பதை
விடவும்
கோபத்திலே
உனது வதனம்
அழகாய்
தெரியுதடி

வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.

## விதி செய்த சதி



மதுரக் குரலில்
மயக்கும் மொழி பேசும்
புதுமைப் பெண்ணவள்!

பின்னல் சடை புரள
மின்னலிடை துவள
அன்ன நடை போடும்
அழகியவள்!
கன்னம் கரிய விழி
கமுகம் பூப் பல்லினொளி
முன்னெழில்கள்
செம் மாதுளங் கனி
ஜன்னலோரம் வந்து நின்று
என்னைக் கவர்ந்தாளவள்!

காதல் மயக்கம் தந்த
கட்டழகி தன்னையந்த
காலன் அழைத்ததினால்
வேதனைக்குள் என்னை வீழ்த்தி
வெகு தூரம் சென்று விட்டாள்!

கவிக்குயிலன். சேனையூர் –06.

## வயல் நிலத்தின் காத்திருப்பு



கமக்காரனின் பிரசன்னம்
இல்லாததால்
முன்னைப் போல
வயலில் பசுமையை
காணவில்லை
வயற்பரப்பு வெறிச்சோடி
இருக்கிறது
கோழிச்சூடன்களும்
நெருஞ்சி முட்களும்
முன்பை விட
அதிகமாய்
முளைத்திருக்கின்றன
ஆனால் அந்த நிலம்
நெற்பயிர்களோட
இசைலாக்கம் பெற்றிருந்தது
தென்திசையில் இருந்து
வருகின்ற மழையால்
உள்ளூர்முட்செடிகள்
கம்பீரமாய் வளர்கின்றன
நீண்ட நாட்களாய்
கமக்காரனின் வரவை
எதிர்பார்த்து காத்திருக்கின்றது
வயல் நிலம்.....
நெல் விதைகளும் கூட....

ஆ.முல்லைத்திவ்வியன்

## தர்ம ஆயுதம்



கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று செய்வோம்
புத்தி எனும் அஸ்திரத்தை
பூட்டுவோம் நாணில்
சத்தியத்தை மந்திரித்து
தரணி எங்கும் பொழிவோம்
கற்றவர்கள் நெற்றியில் இக்
கணைகள் தாக்கும் வேளை
குற்றமுள்ள கொற்றவனின்
குடைகள் சாயும் நாளை


வெற்றி நிலை நாட்ட முருகன்
வேல் எடுத்தான் கிருதா யுகத்தில் நாம்
விடியலினைக் காண எழுதுகோல்
பிடிப்போம் நம் கரத்தில் இந்தக்
கலியுகத்தில்

மாயவதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார் தெரியுமா?”



கதை சொல்லுறது, கதை விடுகிறது, கதை விட்டுக் கதை கேக்கிறது எல்லாம் ஒரு கலை. போன வாரம் உங்களுக்குச் சிங்கமும், முயலும் கதை சொன்னனான். இப்ப உங்கள் எல்லாருக்கும் சிங்கமும் முயலும் கதை தெரியும். அதைப் பிள்ளையளுக்கு என்ன மாதிரிச் சொல்லுறது எண்டதும் சொல்லித் தந்தனான். அவர்கள் கதை கேட்டால் சொல்லுங்கோ. இல்லாட்டில் உங்கடை பாட்டில கதையைச் சொல்லிக் கொண்டு இருங்கோ.

இன்றைக்கு நான் உங்களுக்கு நாய்களும், காகங்களும் கதை சொல்லப் போறன்.

இ.அரசகேசரி அமரராகி விட்டார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர் காரியாலத்திலை உயர் உத்தியோகத்திலை இருந்தவர். படிக்கிற காலத்திலை எங்கடை வாசிகசாலையிலை ஒரு கையெழுத்துப் பத்திரிகை நடத்தினார்கள். அது உருவாக்கிய எழுத்தாளர் பலர். அதை உருவாக்கிய எழுத்தாளரும் பலர். அந்தக் கையெழுத்துப் பத்திரிகையிலை, ஆசிரியராக அரசகேசரி இருந்த காலத்திலை ஒரு குட்டிக் கதை வந்தது. அரசகேசரிதான் எழுதினவர்.

கதை இதுதான்.

"றோட்டுக் கரையொன்றிலை ஒரு சோற்றுப் பொதி-பார்சல்.- இருந்துதாம். அதனை ஒரு குட்டி நாய் கண்டதாம். பசியோடையிருந்த அந்தக் குட்டி நாய் அதைச் சாப்பிடப் போனதாம். அப்ப அந்தத் தெருவிலை திரியுற இன்னுமொரு பெரிய நாய் அந்த இடத்துக்கு வந்திடுமாம். அது சொல்லுமாம் 'நான் தான் இந்த றோட்டிலை பெரிய ஆள். நான்தான் இந்தச் சோற்றைச் சாப்பிடப் போறன்' என்று சொல்லி, அந்த உணவுப் பொதியை சின்னக் குட்டி நாயிட்டையிருந்து பறிக்க முயற்சித்ததாம்". சின்ன நாயும் விடவில்லை.

இவை இரண்டும் சண்டை பிடிக்க, அந்த இடத்துக்கு ஒரு காகம் வருமாம். அது "கா.கா" என்று கரைய இன்னும் கன காகங்கள் வந்திடுமாம். அவை எல்லாம் சேர்ந்து சோற்றுப் பொதியிலிருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விடுமாம்.

சண்டை பிடிச்ச இரண்டு நாய்களிலை, குட்டி நாய் வாங்கிக் கொண்டு ஓடிவிடுமாம். பெரிய நாய் சாப்பிடுவம் என்று வந்து பார்த்தால், அதிலிருந்த உணவைக் காகங்கள் எல்லாம் சேர்ந்து சாப்பிட்டு விட்டுப் பறந்து போய்விடுமாம். பெரிய நாய்க்கும் பசி: சின்னக் குட்டி நாய்க்கும் பசி. காகங்கள் பசி ஆறிப் பறந்து போய்விடுமாம்.

இந்தக் கதையை வாசிச்ச நாள் முதல் அதனை ஒரு நாடகமாக ஆக்கவேணும் என்ற அவா எனக்கு. அதுவும் களத்தூர்க் கண்ணம்மாவிலை வாற சிங்கமும் முயலும் நாடகம் மாதிரிப் பாட்டோடு நாடகமாக்க வேண்டுமென்ற ஒரு ஆசை இந்தப் பரமசிவத்திற்கு வந்தது.

அந்தக் கதையையும் பாட்டோடு - இசையோடு உரை கலந்த ஆற்றுகையாகப் பேரனுக்குச் சொல்லிக் காட்டுறனான். முந்தி அவன் என்னை ரோச்சர் பண்ணுறது போய், இப்ப அவருக்கு நான் கதை சொல்லுறது நல்ல ரோச்சர் - சித்திரவதை என்று தமிழிலை சொல்லலாம்.. என்ரை கதை, பாட்டுக் கேட்டுத்தான் பேரன் இப்ப நித்திரைக்குப் போகலாம்.

இதுதான் அந்தப் பாட்டும் கதையும். நீங்கள் உங்களுக்குப் பிடிச்ச ரியுனிலை இந்தப் பாடல்களைப் பாடியும் பார்க்கலாம். ஆனால் பக்கத்தில் அவ் வேளையில் ஒருவரும் இல்லாமலிருப்பது உங்களுக்கும், உங்கள் வீட்டின் பாதுகாப்பிற்கும் நல்லது. இதற்கான இசை தெரியாவிட்டால், பண் இல்லாமல் தேவாரம் பாடுற மாதிரியும் நீங்கள் பாடி அனுபவிக்கலாம்.

**நாம் ஒருவர் - நாடகம் 'டொட்டடடய்ங்'.**

(தெருவில் சின்னக் குட்டி நாய் ஒன்று எதையோ மோப்பம் பிடித்து அங்கும் இங்கும் ஓடித்திரிந்தவாறு)

**கு.நாய்:** (குட்டி நாய் என்றும் கொள்ளலாம். குட்டை நாய் என்றும் கொள்ள்லாம்)

(பாட்டு) "சோற்றினிலே வரும் வாசம் - நடு
றோட்டினிலே எங்கோ!
பொரித்த மீனொடு
இறால் குழம்பு - என்
நாசியைத் துழைக்குது இங்கே.
எங்கே எங்கே
எங்கும் காணேன்,
உள்ளம் சோர்ந்திடுதே - என்
உள்ளம் சோர்ந்திடுதே" (சோற்றினிலே வரும்)

(என்றவாறு அங்குமிங்கும் ஓடித் திரிந்து கடைசியில் ஒரு சோற்றுப் பொதியினைக் கண்டு மகிழ்ந்தவாறு)

**கு.நாய்:** "எனக்கென்றே இறைவன் இதனைக் கொண்டு வந்து போட்டுள்ளான். ஆகா! என்ன வாசனை!! ம்..ம் இ..இறால் போட்ட வெந்தயக் குழம்பு போலுள்ளது".

**கு.நாய்:** (பாட்டு)
ஆறுநாளில்லா சோற்றினை இன்று
ஆண்டவன் எனக்குத் தந்தானே
ஆறிடும் என் பசி தீர்ந்திடும் என் களை
வேண்டி அவன் பாதம் தொழுவோமே.

(அதனை உண்ணத் தயாா்ப் படுத்துகையில், எங்கிருந்தோ ஒரு பெரிய நாய் உள்ளே வந்து)

**பெ.நாய்:** (பாட்டு)
"யாரடா நாய்ப் பயலே நீதான்!
அடாது இவ் வீதியில் வந்து
வீசியே இருக்கும்
இவ் உணவை உண்ணலானாய்? "ஹர்ஹர்"

**கு.நாய்:** (பாட்டு)
"அண்ணே அண்ணே அல்சேஷண்ணே
நாலு நாளாய் நானுணவைக் காணவில்லையே
கண்ணும் இருளுது, காதும் அடைக்குது"
(அண்ணே அண்ணே)

**பெ.நாய்:** "என்ன? அண்ணேயாவா? இன்றைக்கு அண்ணை என்பாய் ஏது? நாளை மச்சான் என்றும் சொல்லுவாய் போலுள்ளது?"

**கு.நாய்:** (பாட்டு)
"அல்சேஷண்ணை அல்சேஷண்ணை
எளிய நாயேன் முகம் பாரும்.

**பெ.நாய்:** (பாட்டு):
"இங்கேயும் நில்லாதே
ஓடியினித் தப்பப் பாரும்.
என் கோபத்திற்கு இரையாகாது
ஓடித் தப்பப் பார்

**கு.நாய்:** (பாட்டு)
"அல்சேஷண்ணை அல்சேஷண்ணை
எளிய நாயேன் முகம் பாரும்.
நான்தானே முதலில் கண்டேன்
நான்தான் முதலில் தின்பேன்"

**பெ.நாய்:** (பாட்டு):
"அட சின்னவன் எனக்குப் புத்தி சொல்லப் போமா? ஹர்ஹர். ஓடடாஓடு"

**கு.நாய்:**
"ஓடக் கூடிய தெம்பு எனக்கிருந்தால், தங்களைத் தூரத்தில் கண்டதுமே, வாலை மடித்துக் கீழே விட்டு இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காமலே ஓடியிருப் பேனே"

"நான் தான் முதலில் கண்டேன். நான்தான் முதலில் சாப்பிடுவன். நான் சாப்பிட்டு மிச்சம் விட்ட பிறகு வேண்டுமென் றால் நீ சாப்பிடு".

**பெ.நாய்:** "பேந்தும் பார்..என்ன குதர்க்கமா புரிகிறாய்.. நான் யார் தெரியுமா?"

(இரண்டு நாய்களும் ஒன்றையொன்று முறாய்த்தபடி கறுவியவண்ணம், சண்டைக்குத் தயாராகுதலும், தொடர்ந்து கடிபடுதலும். இவ்வேளை எங்கிருந்தோ காகம் ஒன்று அவ் விடத்திற்குப் பறந்து வருதல்)

**காகம் 1** (பாட்டு)
"வாவா வா..கா..கா..கா வா..வா..வா...
கா..கா..கா..வா..வா..வா..வா...."
'எல்லோரும் சேர்ந்து வாங்கோ
ஒன்று சேர்ந்து உண்ணலாம்
உணவு இங்கு உண்டு கா..கா.. வா..'

(பல திசைகளிலுமிருந்து பல காகங்கள் பறந்து வருதல். உணவிற்கு கிட்டச் சென்று முகர்ந்து பார்த்தல் ஒவ்வொன்றாகக் கொத்திப் புசித்தல்)

**காகங்கள்:** (பாட்டு)
"ஆகாயத் தோட்டி நாம் தானே
ஆனாலும் குளித்து உண்போமே
சேர்ந்தே நாம் உண்ணோமாயின்
சோர்ந்தே நாம் போவோமே"

(கா கா கா என்று கரைந்தவாறு அனைத்துக் காகங்களும் திக்கிற் கொன்றாகக் கலைந்து செல்லுதல்.)

(நாய்களது சண்டை முடிவில் குட்டி நாயை பெரிய நாய் கடித்துக் குதறிவிட குட்டி நாய் ஒரு காலை நொண்டியவாறு, அனுங்கி அனுங்கி அவ்விடத்தைவிட்டு நகருதல். பெரிய நாய் உணவை நோக்கிச் செல்லல். அங்கு உணவைக் காணாது துவளுதல்)

**பெ.நாய்.** (பாட்டு).
"எல்லாம் போச்சு ஒன்றும் இல்லை
இன்றும் இனி நான் பசிதான்
என் வீட்டினில் ஒன்றும் தரார்
வேறோர் புதுநாய் அங்குண்டு"

(கவலையுடன் பெரிய நாயும் அவ்விடம் விட்டு அகலுதல்)

(நாடகம் முடிவு. 'டொட்டடடய்ங்..')

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கலாசார பேரவையும், யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய நாடகப் பட்டறையின் போது 92 பேர் பயிற்சிக்கெனத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். கலாநிதி குழந்தை சண்முகலிங்கம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் மௌனகுரு, கலாநிதி கலாமணி, நடிகமணி வி.வி.வைரமுத்து, அரசையா, பிரான்ஸிஸ் ஜெனம், கலாநிதி சிதம்பரநாதன் போன்ற இன்னும், இன்னும் பலர் வளவாளர். பயிற்சியாளரில் தற்போதைய விரிவுரையாளர் ஜெயசங்கர், அமரர் செல்வி, கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், மௌனகுரு சித்தார்த்தன், அரசண்ணா, பரமசிவம் போன்ற பலரும் பயிலுநர். அப் பயிற்சியின் போது நாடகப் பிரதிகள் தயாரித்துக் கொண்டு வந்து தருமாறு குழந்தை சண்முகலிங்கம் அவர்களால் கேட்கப்பட்டிருந்தது. அவரிடம் ஒப்படைக்கப்பட்ட மேற்படி நாம் ஒருவர் நாடகப் பிரதி சபையில் வாசிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஞாபகத்திலிருந்தவை மட்டும் இங்கு தரப்பட்டுள்ளது.

முழுப் பிரதியல்ல. **(அடுத்தவாரம்)**


பம்பல் பரமசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசுக்காகவே நடிக்கிறேன்

## - ஒத்துக் கொள்கிறார் பிரகாஷ்ராஜ்



வில்லனாக அறிமுகமாகி இப்போது குணச்சித்திர நடிகராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பரிணமித்து தமிழ் சினிமாவில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்து வைத்திருப்பவர் பிரகாஷ்ராஜ். அவருடனான நேர்காணல் இது.

கே:- தோல்வி என்று தெரிந்தும் எதற்காக அத்தகைய சில படங்களில் நடிக்கிறீர்கள்?''

ப:- சில படங்களில் ஒப்பந்தம் ஆகும்போது, 'நான் இவங்களுக்குப் பயன்படுவேன்'என்று தோன்றும். 'எனக்கு இவர்கள் பயன்படவே மாட்டார்கள்' என்று தெரிந்தும் புரிந்தும் சில படங்களில் நடித்திருக்கின்றேன். அதுக்குக் காரணம்... காசு. இதை வெளிப்படையா சொல்வது எனக்கு வெட்கம் எதுவும் இல்லை!''

கே:- 'சிங்கம்' படம் தவிர்த்து கடந்த இரண்டு வருடங்களில் வெற்றிபெற்ற தமிழ்ப் படங்களில் நீங்கள் இல்லை. சமீபமாகவே நாயகன், வில்லன், இயக்குநர் என்று எதிலும் அறிமுக இளைஞர்கள்தான் முத்திரைப் பதிக்கிறார்கள். ஆக, இனி பிரகாஷ்ராஜின் எதிர்காலம்?

ப:- நான் மட்டும் அல்ல, எந்த ஒரு நடிகனுடைய எதிர்காலமும் உத்தரவாதமா இருக்க வேண்டுமென்றால், அது யார் கையில் இருக்கு தெரியுமா? எப்படியாவது வெற்றிப் படம் தர வேண்டுமென்ற வெறியோடு இருக்கும் உதவி இயக்குநர், ஒரு பாத்திரத்தை யோசிக்கும் போது, 'பிரகாஷ்ராஜ் மாதிரி ஒருத்தர்' என்று நினைக்க வேண்டும், அப்படி நினைக்கும் பட்சத்தில் தான் பிரகாஷ்ராஜின் எதிர்காலம் எப்படி என்று தீர்மானிக்க முடியும். அப்படி யாராவது யோசிக்கிற வரைக்கும் நடிகனா எனக்கு எந்தக் குறையும் வராது. உதவி இயக்குநர்கள் சிந்தனையில் நான் இல்லாமப் போய்விட்டால் என் காலம் முடிந்துவிட்டதென்று அர்த்தம்.

கே:- உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்த உங்கள் திட்டமிடல் என்ன? நடிக்க விரும்பினால் வரவேற்பீர்களா?''

ப:- ஒரு காக்கா, தன் குஞ்சுக்கு எப்படிப் பறக்கணும் என்று சொல்லிக்கொடுக்குமே தவிர, எங்கு பறக்கவேண்டும் என்று வட்டம் போட்டுக் கட்டுப்படுத்தாது. காக்காவுக்கு இருக்கிற அந்த அறிவுகூட ஆறறிவு கொண்ட மனுஷனுக்கு இல்லை. தன் குழந்தைகள் என்ன படிக்கவேண்டும், என்ன வேலை செய்யவேண்டும், எப்படி வாழவேண்டும் ஒரு வட்டம் போட்டு அதில் அவங்களை நிறுத்துகிறார்கள். அப்படியே கையில் ஒரு சாட்டையை வைத்துக்கொண்டு காவல் வேற காக்கிறார்கள். பிள்ளைகளோட விருப்பத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இவர்களின் கணக்குப்படி வாழவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். என் குழந்தைகள் என்னவாக விருப்பப் படுறாங்களோ, அந்தத் துறையில் அவர்கள் கடினமாக உழைத்து, திறமையைச் சரியாகப் பயன்படுத்தி நல்ல நிலைமையில் இருக்கிறதுதான் என் விருப்பம். சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், அவர்கள் விருப்பம்தான் என் விருப்பம். என்னால் முடிந்த அளவுத் துணையா இருப்பேன்!

கே:- ரகுவரன், நாசர், பிரகாஷ்ராஜ்...என 'பளிச்' என்று எல்லா வகையான பாத்திரங்களிலும் நடிக்கிற நடிகர்கள் வரிசை உங்களோடு முடிவுக்கு வந்துவிட்டதே. இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

ப:- எங்கள் மூன்று பேருக்கும் இருக்கும் ஒற்றுமை, வாழ்க்கையை சினிமாவில் பிரதிபலிக்கிற வாய்ப்புக் கிடைந்தால் சந்தோஷமாக அதைச் செய்யவேண்டும். நீங்கள் பசுபதியை இந்த வரிசையில் சேர்த்துக்கொள்ள லாம். இன்னும் பலர் வருவார்கள். நான் வில்லனாக அறிமுகமாகித் தினம் தினம் கமரா முன்னால் வில்லத்தனம் செய்துவிட்டு இருந்த நேரம் அது. ஒருநாள், 'என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு' படம் பார்த்தேன். அந்தப் படத்தில் ஒரு குழந்தையோட அப்பாவா ரகுவரன் அட்டகாசப்படுத்தி இருப்பார். 'அடடா, நானும் இந்த மாதிரி பாத்திரத்தைத் தேடித் தேடிப் பண்ணவேணும்' என்னைப் பொறாமைப்பட வைத்த நடிகர் ரகுவரன். அவருடைய திறமைக்கு வாய்ப்புகள் கொட்டிக்கிடந்தன இங்கே. ஆனால், அவர்தான் தன் ஆயுளைக் கொஞ்சமாக் குறைத்துவிட்டார் - என்றார்.


U.S.A GREEN CARD VISA

அமெரிக்க GREEN CARD VISA விண்ணப்பிப்பதில் 11 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2015ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/= முத்திரையொட்டப்பட்டு சுயமுகவரியிட்ட தபாலுறையை

Bristol Cyber Cafe

No,8/3/4, Bristol Street, Colombo-01

என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.பதிவிலக்கம் W/A 44843

இதுவரை விண்ணப்பப் படிவங்களை பெறாதவர்கள் உடனடியாக தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையில் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

011 2393919, 077 4276579

இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 12 யாத்திரிகர்கள்: 10 பேர்

ஆரம்பம்: 25.10.2013 - 05.11.2013

தரிசிக்கும் ஆலயங்கள்

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி முருகன், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன், வரதராஜப்பெருமாள், நவசீரடி பாபா, பொற்கோவில், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருவண்ணாமலை, சிதம்பரம், நவக்கிரக ஆலயங்கள் 9. ராகு, கேது, சுக்கிரம், செவ்வாய், புதன், சூரியன், சந்திரன், வியாழன், சனி பகவான், வைரவன்பட்டி, குபேரன் கோவில், தஞ்சாவூர், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம் குன்றம், அழகர்கோவில், பழமுதிர்சோலை, நாகாத்தம்மன், மேல் மருவத்தூர், தோணியப்பர், ஸ்ரீ ரெங்கம், திருவானைக்காவல், சமயபுரம், மாங்காடு, திருவேற்காடு, அஷ்டலெட்சுமி, அறுபடை முருகன் (ஒரே இடத்தில்) பார்த்தசாரதி, கபாலீஸ்வரர், தன்வந்திரி விஸ்ணு, 408 சிவலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கலாம், வெக்காளி அம்மன் உட்பட 40 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். சென்னையில் ஒரு நாள் செப்பிங் செய்யலாம்.

எமது சேவைகள்:

இருவழி விமான டிக்கட், காலை காப்பி, தேநீர்பலகாரம், மதிய உணவு சாதம், 4 மணி காப்பி, தேநீர், இரவு காப்பி, பலகாரம், தங்குமிடங்கள் 2,3 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறையுடன் கூடிய அறைகள், யாத்திரை முடியும் வரை A/C வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் பாஸ்போர்ட் பட முன்பக்க போட்டோ பிரதியும், ஒரு பாஸ்போர்ட் அளவு வர்ண புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். விபரம் கேட்டறிந்து பதிவு செய்க.

மேலதிக விபரங்களுக்கு:

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்

59, C 3/3, மூன்றாம் மாடி, செட்டியார் தெரு, கொழும்பு -11

T.P: 0777 680102 / 0724 222 989

மட்டக்களப்பில்
K.ராஜகோபால்
தொ.பே: 0653653719
075 2621141

திருகோணமலையில்
திரு. T.சிவபாலன்

யாழ்ப்பாணத்தில்
S.பிரசாத்
0212228155
M.குமாரசிங்கம்
021[illegible]
075[illegible]

ஹரே கிருஷ்ணா

ISKCON

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

ரூபா.3,000/-

ஒரு செங்கல்லுக்காக செலுத்தி

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.




உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

வங்கி விபரங்கள்

Hatton National Bank, Kotahena
A/C name: ISKCON
A/C No : 207010000891

Commercial bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No : 1120017042

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பெக்ஸ்: 2471099
ஈ-மெயில்: iscon@slt.lk
www.iskcon.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org